# பெண்கள் ஜமாத்

முரசு 1 ஏப்ரல்-ஜீன் 2006 முழக்கம் 2



## பெண்ணின் மூக்கைக
## அறுத்த கணவர்

# உன் மனதை நம்பு..!

பெண்கள் ஜமாத் எதையும்
புதிதாகப் புகுத்தவில்லை!
புகுத்திய கருத்துக்கள், ஏனென்று
புரிய வைக்கிறது!
பெண்களால் பெண்களுக்காக
நடத்தப்படுவதே பெண்கள் ஜமாத்!
சீலைக்குள் இருக்கும்
ஓவியமா பெண்? – அவள்
சிப்பிக்குள் முத்தா?
சிப்பியை உடைக்கத்தான்
முழு மூச்சாய்ப் போராடும்
பெண்கள் ஜமாத்!
வரதட்சணை என்றால்
வாரிக் குடுக்கணும்!
மஹர் என்றால்
மணிக் கட்டுக்குள் அடங்கணும்!



நாம் சிந்திக்கவே
பெண்கள் ஜமாத்!
பெண்ணே நீ எழு!
உரிமைக்குக் குரல் கொடு!
யாரைப் பார்த்தும் அஞ்சாதே!
உன் மனதை நம்பு!
எதிர்த்து நில்!
வெற்றிப் படிக்கட்டில் ஏறு! ஏறு! ஏறு!
என்று வலியுறுத்துகிறது ஸ்டெப்ஸ் நிறுவனம்!

– ஆயிஷா

இஸ்லாமியப் பெண்கள் உரிமை! மனித உரிமையே!

# பெண்கள் ஜமாத்

இதழ் 2 ஏப்ரல்- ஜீன் 2006

## தலையங்கம்

தேசிய அளவில் பிரதம மந்திரியின் உயர்மட்டக் கமிட்டி ஒன்று முஸ்லீம் பெண்களின் சமூக பொருளாதார நிலை குறித்த ஆய்வு செய்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக கடந்த ஆண்டு மார்ச் 9 ம் தேதி அமைக்கப்பட்டது. அந்த உயர்மட்டக் கமிட்டி இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் (தமிழ்நாடு தவிர) சென்று ஆய்வு செய்து அதன் அறிக்கையைச் சமர்ப்பிக்கும் நிலையில் ஏப்ரல் 10 ம் தேதி முஸ்லீம் பெண்கள் மத்தியில் பணி செய்யும் சில அமைப்புகளுடன் ஒரு கலந்தாய்வுக் கூட்டம் நடத்தியது. ஸ்டெப்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் திருமதி. ஷெரீஃபா அவர்களும் இந்தக் கூட்டத்திற்கு அழைப்பாளராகச் சென்று தமிழக அளவில் உள்ள முஸ்லீம் பெண்களின் நிலைகள், ஸ்டெப்ஸ் நடத்திய ஆய்வுகளின் முடிவுகள், முஸ்லீம் பெண்களின் பிரச்சனைகள் மற்றும் அதன் தீர்வை நோக்கிய தேவைகள் குறித் துத் தகவல்களைப் பரிமாறிக் கொண்டார்.

பல அமைப்புகளும் முஸ்லீம் பெண்களின் வாழ்க்கை நிலை மேம்பாட்டிற்காகப் பேசினார்கள். ஆனால் இஸ்லாத்தை இறுகப் பற்றியிருக்கும் தூண்களாகக் கருதப்படும் மத அமைப்புகள் மத்தியில் முஸ்லீம் பெண்கள் தொடர்பான சிந்தனை, செயல்பாடு, மற்றும் செயல்முறை மாற்றம் வராதவரையில் முஸ்லீம் பெண்களின் மேம்பாட்டிற்காக எத்தனைத் திட்டங்கள் வகுத்தாலும் அவர்கள் வாழ்வை மேம்படுத்த இயலாது என்ற கருத்து திருமதி.ஷெரிஃபா அவர்களால் வலியுறுத்தப்பட்டது.

இன்றைய காலகட்டத்தில் இஸ்லாத்தின் நெறிமுறைகளிலோ, அது வழங்கியுள்ள உரிமைகளிலோ நமக்கு எந்தவிதமான ஐயமும் தேவையில்லை. அதை முறையாக வெளிப்படுத்தி மக்க

ளிடம் நடைமுறைப்படுத்த வேண்டிய, இஸ்லாமிய மக்களைக் கட்டுக் கோப்பாக வைக்கக் கடமைப்பட்டவர்களாகிய மதத் தலைவர்களின் இஸ்லாத்திற்குப் புறம்பான செயல்கள் பெண்களுக்குப் பாதகமான செயல்களாகவும் ஆண்களுக்கு ஆதரவாகவும் இருப்பதால் இஸ்லாமியப் பெண்கள் இஸ்லாத்திற்குள்ளேயே நீதி கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எல்லா இஸ்லாமிய மத அமைப்புகளும் இஸ்லாத்திற்குப் புறம்பாக இல்லையென்றாலும் நமது இஸ்லாமியச் சமுதாயக் கட்டமைப்பு முறையில் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் ஒரு ஜமாத்தின் அநீதியைக் கேள்வி கேட்கும் அமைப்பு முறை இல்லாததால் உள்ளூர் ஜமாத்தினர் அவர்களது செயல்பாடுகளை எதிர்த்துக் கேள்வி எழுப்புவோரை ஜமாத்தை விட்டு விலக்கி விடுவோம் என்று மிரட்டியே இஸ்லாத்தை வளர்த்து வரும் நிலையில் உள்ளோம்.

இந்திய அரசாங்கம் இஸ்லாமியப் பெண்களின் மேம்பாடு, பாலியல் சமத்துவம் மற்றும் சமூக மேம்பாடு பற்றிச் செயல்படத் துவங்கும் தருவாயில் இஸ்லாமியர்கள் ஆணாதிக்கச் சிந்தனையிலிருந்து மீண்டு, இஸ்லாம் வகுத்துள்ள சமத்துவத்தை முறையாக நடைமுறைப்படுத்தினால், மதத்திற்குள் பெண்களுக்குரிய அங்கிகாரத்தைக் கொடுக்க முன்வந்தால் நமது பெண்களுக்காக அரசு மற்றும் பிற துறைகளில் இருந்து கிடைக்கும் சலுகைகள் தடையின்றி வரும்.

*-ஆசிரியர் குழு*



## பெண்கள் ஜமாத்


**ஆசிரியர் குழு:**

*ஷெரிஃபா ஃகானம்*
*ஆயிஷா*
*ஜீபைதா*
*ஹம்சூன்*
*அமீஸ்*
*ஃபரிதா பேகம்*

# இஸ்லாத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்

786

*"ஒருவருக்குப் பெண் குழந்தை பிறந்தால் அந்த இல்லத்திற்கு இறைவன் வானவர்களை அனுப்புகிறான். அவர்கள் வந்து, 'இல்லத்தில் உள்ளவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்' என்று கூறுகிறார்கள். பிறகு அந்தக் குழந்தையைத் தமது சிறகுகளால் அரவணைத்துக் கொள்கிறார்கள். பிறகு குழந்தையின் தலை மீது தடவிக் கொண்டே, இது ஒர பலவீனமான உயிரிலிருந்து பிறந்த ஒரு பலவீனமான உயிராகும். இக் குழந்தையை வளர்ப்பவருக்கு மறுமை நாள் வரையில் இறைவனின் உதவி கிடைத்துக் கொண்டே இருக்கும்" -அறிவிப்பவர்: நபீத் இப்து ஹீரைத் (ரலி)*

**சிறப்புரிமை உணர்வு:**

தனி மனிதனொருவன் வன்முறையில் ஈடுபடுவதற்கு அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்ற விருப்பமே காரணமாக இருக்க வேண்டியதில்லை. குறிப்பான சில சிறப்புரிமைகள் தனக்குண்டு என்று அவன் உணர்வு பூர்வமாகக் கருதுவதாலேயே அத்தகைய வன்முறை பெரிதும் நிகழ்கிறதெனப் பல பெண்ணுரிமை ஆய்வுகளும் சுட்டிக் காட்டியுள்ளன. சரி யான நேரத்தில் தனக்கு உணவு தராததற்காக மனைவியை அடிக்கிற ஒருவன் அதுபோல மீண்டும் நடைபெறக்கூடாது என்பதற்காக மட்டுமல்ல. அவளிடம் வேலை வாங்குவதற்குத் தனக்க உரிமை உண்டெனக் காட்டவும்தான் அப்படிச் செய்கிறான். ஆண் ஆதிக்கமுள்ள சமுதாயத்தில் பெண்களுக்கு எனத் தனி உரிமைகள் இல்லையா? அது குறித்துச் சிந்திக்கத் தோன்ற வில்லையா?

இஸ்லாமியப் பெண்களுக்குப் பள்ளிவாசல் என்றால் பொதுவாழ்வின் ஒவ் வொரு அம்சத்திற்குமான நுழைவுரிமை என்றே பொருள்.

இஸ்லாத்தில் பெண்களின் அந்தஸ்து பற்றி- முக்கியமாக திருமணம், சொத்துரிமை, பர்தா மற்றும் தனிமைப் படுத்தப்படுதல் போன்ற பிரச்சனைகள் நிறைய ஏற்படுகின்றன. இஸ்லாமியப் பெண்களுக்கு என்று தனி உரிமை இன் னும் கொடுக்கப்படவில்லை.

"முஸ்லீம் பெண்களின் இஸ்லாமிய உயர்கல்வி, ஒரு மனித உரிமைச் செயல் திட்டம் (Muslim women's Islamic higher learnig as a Human Right: The Action Plan) என்ற கட்டுரையில் கூடப் பெண்களுக்கு மனித உரிமை தரப் பட வேண்டும் என்று கூறப்படுகிறது."


பெண்ணின் அதிமுக்கிமான அடிப்படையான களம் எது?

வீடா? மனித ஆக்கப் பணியா? சமூகக் களமா?

அதாவது ஆணும், பெண்ணும் சம அந்தஸ்துடையவர்கள் என்ற கண் ணோட்டத்தில் வீட்டிலும், வீட்டிற்கு வெளியேயும் சம அந்தஸ்தோடு காரியமாற்ற வேண்டுமா? இந்தப் பிரச்சனைக்கு இஸ்லாம் சொல்லும் தீர்வு பெண் எதிர்காலப் பரம்பரையை உருவாக்கும் உன்னதப் பொறுப்பு வாய்ந்தவள். அவளது உடல், உள இயற்கை அமைப்புகள் அனைத்தும் இந்தப் பணிக்கு ஏற்பவே ஆக்கப் பட்டுள்ளன. இதன் பொருள் வீட்டில் அவள் அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்பதல்ல. அவள் வீட்டை விட்டுப் போர்க்களம் செல்லக் கூட அது அனுமதிக் கின்றது. ஆனால் வீட்டில் அவளது பணிக்கு அது பாதகம் விளைவித்துவிடக் கூடாது என இஸ்லாம் வேண்டுகிறது.

கணவன் - மனைவி உறவிலும் இது போன்ற இரு வேறுபட்ட போக்கு களை அவதானிக்கலாம். சிலர் இருக்கிறார்கள், அவர்கள் தமது மனைவியருக்கு எந்த முக்கியத்துவமும் அளிப்பதில்லை. அவர்களை எந்தவொரு விடயத்திலும் கருத்துத் தெரிவிக்கவோ எண்ணத்தை வெளியிடவோ அனுமதிப்பதில்லை. எந்த அளவுக்கெனில் பெண் மக்களுடைய திருமண விடயத்தில் கூட மனைவி யின் ஆலோசனையைக் கணவன் பெறுவதில்லை. ஆனால், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் "பெண்களிடம் அவர்களது புதல்வியர் விஷயமாக ஆலோச னை கேளுங்கள்" என்று கூறியுள்ளார்கள். அதாவது "மகளின் விஷயமாகத் தாயின் கருத்தை அறிந்து கொள்ளுங்கள். ஏனெனில் மகளைப் பற்றித் தாயே நன்கு அறிந்திருப்பாள். இதனையே நபியவர்கள் கூறவிரும்பிய கருத்து."

தாய்ப்பால் அருந்தும் பிள்ளை பற்றிக் கூறியுள்ள அல்லாஹ், "தாயும், தந்தையும் பிள்ளைக்குப் பால் மறக்கடிப்பதற்கு நாடினால் இருவரது விருப்பத்தின் பேரிலும், பரஸ்பர ஆலோ சனையின் பின்பும் அவ்விருவரும் அவ்வாறு செய்வதில் எத்தவறும் இல்லை" (அல் மகரா: 233) என்று விவரிக் கிறான.



இதனையே அல்லாஹ்,

"ஆண்களின் நிர்வாகிகள் பெண்கள்" என்று




கூறாமல் "ஆண்கள் பெண்களின் நிர்வாகிகள்" என்று கூறியிருக்கின்றான். இந்தப் பண்பைப் பெறும் முஸ்லீம் பெண் தனது உரிமைகளுக்காகப் போராடும் அதே வேளை தன் மீது விதியாக்கப்பட்டுள்ள கடமைகளையும் நிறைவேற்றுவாள். ஆனால் உரிமைப் போராட்டத்தை நடத்துமுன் கடமைகளை நிறைவேற்றுவதிலும் கவனமாக இருப்பாள்.

அல்லாஹ், "மூடும் இரவின் மீது சத்தியமாக, பிரகாசம் வெளிப்படும் பகலின் மீது சத்தியமாக, ஆணையும் பெண்ணையும் படைத்தவன் மீது சத்தியமாக" (92: 1-3) என்று கூறுகிறான்.

கால ஓட்டத்திற்காக இரவையும் பகலையும் படைத்திருப்பது போல, வாழ்க்கை ஓட்டத்துக்காக ஆணையும் பெண்ணையும் படைத்திருக்கிறான். பகலுக்கு இரவு ஜோடி, ஆணுக்குப் பெண் ஜோடி. இரவும் பகலும் இல்லாமல் உலகம் இயங்காது. அதே போல் ஆணும் பெண்ணும் இன்றி மனித வாழ்வு நிலைக்காது; ஆண்மையும் தேவை; பெண்மையும் தேவை என்று நம்மைப் படைத்த அல்லாவே கூறியுள்ள போது, ஆணும் பெண்ணும் சரிசமம் என்று அல்லாவே கூறியுள்ள போது, பெண்களுக்கு மட்டும் ஏன் மனித உரிமையைப் பறித்தீர்கள்? பறித்தவர்கள் யார்?

## விவாகரத்துப் பெற்ற மனைவிக்கான பராமரிப்பு (அந்நிசா-1):

விவாகரத்துப் பெற்ற ஒரு முஸ்லீம் மனைவி இத்தா காலகட்டத்தில் மட்டுமே கணவனிடமிருந்து பராமரிப்பைப் பெறுகின்றார். அதாவது, விவாகரத்துப் பெற்ற மூன்று மாதத்தின் பின்னரும் அவள் கர்ப்பிணியாக இருந்தால் பிள்ளை பிறக்கும் வரைக்கும் பராமரிப்புச் செலவு வழங்கப்பட வேண்டும். இக்காலத்தில் தங்குமிடம், உணவு, உடை உட்பட அனைத்துப் பராமரிப்பையும் கணவனிடமிருந்த பெற மனைவிக்கு உரிமையுண்டு. இது கணவனின் வருமானத்தைப் பொறுத்ததாக அமைந்திருக்கும்.

இத்தா காலகட்டத்தில் மனைவி தனித்திருப்பதில்லை என்று வாதிடுவதன் மூலம் சில கண்வன்மார் இத்தா பாரமரிப்பு வழங்குவதிலிருந்தும் தப்பித்துக் கொள்ள முனைகின்றனர். இத்தா என்பது மறுமணம் செய்வதிலிருந்தும் விலகியிருத்தல் என்று நாம் பொருள் கொள்கின்றோம். அத்தோடு விவாகரத்துப் பெற்ற மனைவி தனது தொழிலை / வேலையைத் தொடர்ந்து மேற்கொள்வதோடு தனது தேவையின் நிமித்தம் பகல் வேளைகளில் வெளியே செல்லவும் முடியும். எனவே இக்கால எல்லைக்குள் மனைவி மறுமணம் செய்யாதிருக்கும்

வரையில் கணவர் அவளைப் பராமரிக்க வேண்டிய கடப்பாட்டிற்கு உள்ளாகின்றார்.

மேலும் விவாகரத்துப் பெற்ற மனைவிக்கான நியாயமான பராமரிப்பு என்றால் என்ன என்ற விடயம் பற்றியும் குறிப்பிட விரும்புகின்றோம். புனித அல் குர் ஆன் கூறுகின்றது.



"மேலும் விவாகரத்து செய்யப்பட்ட பெண்களுக்கு, செலவினம் பெறப் பாத்தியம் உண்டு. செலவினம் கொடுப்பது பயபக்தியுடையோர் மீது கடமை யாகும்."(2:241)

விவாகரத்துப் பெற்ற மனைவி நியாயமான முறையில் பராமரிக்கப்படல் வேண்டும் என அல் குர் ஆன் கூறுகின்றது.

சில முஸ்லிம் நாடுகளில், விவாகரத்துப் பெற்ற மனைவி இத்தா காலப் பராமரிப்பை விட மேலதிகமாக "மத்தா" எனப்படும் ஒரு தொகைப் பணத்தைப் பெறவும் உரிமையுடையவராகின்றார். "தலாக்"மற்றும் "பஸாஹ்" முறை விவாகரத்தின் போது விவாகரத்துப் பெற்ற மனை விக்கு வழங்கப்படும் அன்பளிப்பாகவே மத்தா கருதப் படுகின்றது.

**அநாதைப் பெண்களிடம் நீதியோடு நடப்பீர்! (அந்நிசா - 4:127):**

இவ் வசனத்தின் கருத்தாவது: ஒருவர் தமது பொறுப்பிலுள்ள அநாதைப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதியுண்டு. அவ்வாறு அவர் அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்பும்போது, அவளுக்குரிய முறையான மணக்கொடையைக் கொடுத்துவிட வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிடுகின்றான். அவளைத் திருமணம் செய்ய விருப்பமில்லையென்றால், வேறொரு பெண்ணை அவர் முறையாக மணமுடித்துக் கொள்ள அல்லாஹ் தாராளமாக அனுமதிக்கின்றான். இது தொடர்பாக இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் (4:3) கூறப்பட்டுள்ளது.

சில வேளைகளில், அந்தப் பெண் அழகற்றவளாக இருப்பதால் அவளைத் திருமணம் செய்து கொள்ள அவருக்கு விருப்பமில்லாமல் போகலாம். அப்போது தமக்கும் அவளுக்கம் உரிய சொத்தில் அவளுக்குக் கணவனாக வருகின்றவன் பங்காளியாக வருவதை அஞ்சி, அவளை மற்றவர் திருமணம் செய்வதைத் தடுக்கக் கூடாது என்றும் அல்லாஹ் கட்டளையிடுகின்றான்.

இவ்வசனம் குறித்து இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறியதாவது:



அறியாமைக் காலத்தில் ஒருவர் தம்மிடமுள்ள அநாதைப் பெண்ணின் மீது தமது ஆடையைப் போட்டுவிட்டால், மற்ற எவரும் அவளை ஒரு போதும் திருமணம் செய்து கொள்ள முடியாது. அவள் அழகானவளாக இருக்கும் பட்சத்தில் அவளைத் திருமணம் செய்து கொண்டு அவ ளது சொத்தை அந்தக் காப்பாளரே அனுப விப்பார். அவள் அழகற்றவளாக இருந்தால், அவள் இறக்கும் வரை வேறொருவர் அவ ளைத் திருமணம் செய்து கொள்ளாதவாறு தடுத்து விடுவார். அவள் இறந்த பிறகு அவளது சொத்துக்கு அவரே வாரிசாக ஆகி விடுவார். இதற்கு அல்லாஹ் தடை விதித்தான்.

இவ்வசனத்தில் இடம் பெற்றுள்ள பலகீனமான சிறுவர்கள் எனும் சொற் றொடர் தொடர்பாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது: அறியாமைக் கால மக்கள் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் சொத்துரிமை வழங்க மறுத்து வந்தார்கள். இதையே 'அவர்களுக்கு நிர்ணயிக்கப் பட்டதை அவர்களுக்கு நீங்கள் வழங்காமலேயே' எனும் சொற்றொடர் குறிப்பிடுகின்றது. இதற்கு அல் லாஹ் தடை விதித்து சொத்தில் ஒவ்வொருவருக்குரிய பங்கையும் விவரித்தான். சிறியவராக இருந்தாலும் பெரியவராக இருந்தாலும் "ஓர் ஆணுக்கு இரண்டு பெண்களின் பாகத்திற்கு சமமானது உண்டு" (4:11) என அல்லாஹ் அறிவித்தான்.

சயீத் பின் ஜீனவர்(ரஹ்) அவர்கள் "அநாதைகளிடம் நீதியோடு நீங்கள் நடந்து கொள்வது" எனும் சொற்றொடருக்கு விளக்கமளிக்கையில் கூறிய தாவது: அநாதைப் பெண் வசதி படைத்தவளாகவும் அழகானவளாகவும் இருக் கும் போது, நீங்கள் அவளை மணமுடித்து உங்களிடமே வைத்துக் கொள்ள விரும் புவதைப் போன்றே, அவள் அழகற்றவளாகவும் வசதியற்றவளாகவும் இருக்கும் போதும் அவளைத் திருமணம் செய்த உங்களிடமே வைத்துக் கொள்ள வேண் டும். அடுத்து "நீங்கள் எந்த நன்மை செய்தாலும் அதை அல்லாஹ் நன்கறிப வனாக இருக்கின்றான்" என்று இந்த வசனம் தெரிவிக்கின்றது. இது இறைக் கட்டளைகளை நிறைவேற்றி, நல்லறங்கள் புரிய வேண்டும் எனத் தூண்டு கின்றது. அவை அனைத்தையும் அல்லாஹ் அறிகின்றான். அவற்றுக்குரிய முழுமையான பிரதிபலனை அவன் உங்களுக்கு வழங்குவான் என்று உணர்த்துவது.

**(இரஹமத் அறக்கட்டளை மூலம் வெளியிடப்பட்ட திருக்குர்ஆன் விரிவுரை, இரண்டாம் பாகத்திலிருந்து பெறப்பட்டது.)**



# மனித உரிமைக்கான குறிக்கோள்களும், நோக்கங்களும்:

1. மனித உரிமைத் தளத்தை விரிவுபடுத்தவும், மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கவும், வட்டார மாநில, தேசிய அளவில் மனித உரிமைச் சூழல்களை ஆய்வு செய்து விழிப்புணர்வோடு நோக்கும் வகையில் மக்களைத் தயார் செய்தல்.

2. மக்கள் உரிமைக்காகத் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு மனித நேயத்தை மையமாகக் கொண்ட கருத்தியலை மக்கள் மத்தியில் வளர்த்திடவும் செயல்படவும் உதவுதல்.

3. மனித உரிமைக் கண்ணோட்டத்தில் ஆக்கபூர்வமான, மனித நேயத்தை மையமாகக் கொண்ட, மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கக் கூடிய இயக்க உறுப்பினர்களையும் இயக்கத்தையும் வளர்த்தெடுத்தல்.

4. மனித உரிமை மீறல்களுக்குள்ளாக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகப் பாதிக்கப்பட்டவரை நேரடியாகச் சென்று சந்திக்கவும், பாதிப்புக்குள்ளானோர் மனித உரிமையின் பால் நம்பிக்கை கொள்ளவும் மறுவாழ்வு பெறவும் வழிவகை செய்தல்.

5. மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சட்ட உதவி செய்வதோடு மாநில, தேசிய மற்றும் அகில உலக அளவில் செயல்படும் மனித உரிமை ஆணையங்கள், இயக்கங்கள், நிறுவனங்களோடு தோழமை கொண்டு பாதிக்கப்பட்டோர்களது உரிமைகளைப் பாதுகாத்திட வழிவகை செய்தல்.

6. மனித உரிமை மீறல்களின் போது அரசின் பதில் சொல்லும் கடப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் மனித உரிமைப் பாதுகாப்புப் பணியில் நம்பிக்கை ஏற்படுத்தி இயக்க உறுப்பினர்களை மனித உரிமைக் காப்பாளர்களாக உருவாக்குதல்.

7. மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சட்டத்திற்குட்பட்ட போராட்டங் களை முன்னெடுத்தல்.

8. மனித உரிமை தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு சட்டரீதியான மாறுதல்களை உருவாக்கும் வகையில் தொடர் செயல்பாட்டுக்கு இட்டுச் செல்லுதல்.

# இந்திய வரதட்சணைத் தடுப்புச் சட்டம்

**வரதட்சணைத் தடுப்புச் சட்டத்தின் நோக்கம்:**

**1961**–ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இச்சட்டமானது வரதட்சணை கொடுப்பதையும் வாங்குவதையும் தடுக்கிறது. அதன் பின்பு 1984-லிலும், 1986 -லிலும் வரதட்சணை ஒழித்த சட்டத்திருத்தம் செய்யப்பட்டு நடைமுறையிலிருந்து வருகின்றது.

"வரதட்சணை"என்பது சொத்தையோ (அ) மதிப்புமிக்க ஒரு ஆவணத்தையோ கொடுப்பது (அ) ஒப்பந்தத்தை மறைமுகமாகவோ (அ) நேரடியாகவோ திருமணத்திற்காக பெற்றோர் களாலோ (அ) மற்றவர்களாலோ மாற்றிக் கொள்வதாகும்.

இந்த "வரதட்சணைத் தடுப்புச் சட்டம்" அனைத்துச் சமுதாயத்தைச் சேர்ந்த மதத்தவருக்கும் பொருந்தும்.

**வரதட்சணைகொடுக்கல் - வாங்கலுக்கான தண்டனை:**

வரதட்சணை கொடுப்பதும், அதை ஏற்றுக் கொள்வதும் தண்டனைக் குரியதாகும். ஏனென்றால் இது ஒரு குற்றவியல் சார்ந்த குற்றமாகும்.



ஒரு நபர் வரதட்சணை கொடுத்ததற்காக (அ) வாங்கியதற்காக, கேட்டதற்காகக் குற்றம் சாட்டப்பட்டால் அந்த நபருக்குக் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ. 15,000 க்குக் குறையாமல் அபராதமும் விதிக்கப்படும். போதுமான காரணங்களின் அடிப்படையில் வேண்டுமானால் தண்டனை காலத்தைக் குறைக்கலாம்.

திருமணத்தின் போது மணமகள் (அ) மணமகளுக்குக் கொடுக்கப் படும் அன்பளிப்பு (Presents) என்ற தண்டிக்கக் கூடியதல்ல. கொடையானது கட்டாயப் படுத்தப்படாமல் மற்றும் சொந்த விருப்பத்துடன் இருக்க வேண்டும். கொடுக்கப்படும்

அன்பளிப்பானது உள்ளூர் வழக்கத்தில் உள்ள ஒன்றாகவும், கொடுப்பவரின் அன்பளிப்பு அவரது பணத் தகுதிக்கு ஏற்றாற்போலும் இருக்க வேண்டும்.

வரதட்சணை கொடுக்கவும், வாங்கவும் போடப்படும் ஒப்பந்தம் சட்டப்படி செல்லாது. இது போன்ற உடன்பாடுகளும், ஒப்பந்தங்களும் சட்டபூர்வமாக அமல்படுத்தக் கூடியவை அல்ல. எந்த நபர் வரதட்சணை வாங்கினாலும் அதை அந்தப் பெண்ணிற்காகப் பெற்றோரே அவரது முன்பாக மாற்றித்தர வேண்டும். திருமணத்திற்கு முன்னரே வரதட்சணை பெற்றிருந்தால் திருமணமான 3 மாதத்திற்குள் அந்தப் பெண்ணிற்குக் கொடுக்கப்பட வேண்டும். அதே போன்று திருமணத்தின் போது பெற்றிருந்தாலும் வரதட்சணை பெற்ற 3 மாதத்திற்குள் கைமாற வேண்டும்.

மணப்பெண் இளவலாக இருக்கும்போது வாங்கப்பட்ட வரதட்சணையானது அவள்18 வயது பூர்த்தியடைந்த 3 மாதத்திற்குள் அவளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அது வரையில், யார் வரதட்சணையைப் பெற்றாரோ அவர் நம்பகமான முறையில் அவளது நலனுக்காக வைத்திருக்க வேண்டும்.

வரதட்சணைச் சொத்தை மணப்பெண்ணுக்கு மாற்றவில்லையெனில் பிரிவு 6-ன்படி, 6 மாதம் முதல் 3 வருடங்கள் வரை சிறைத் தண்டனை (அ) அபராதமாக ரூ5,000 -லிருந்து, ரூ 10,000-வரையிலும் (அ) இரண்டும் சேர்த்து தண்டனையாக வழங்கப்படும்.

ஒரு கணவன் தாம்பத்ய உரிமையைத் தனது மனைவிக்கு மறுத்தால்:

ஒரு ஆண்டு வரை சிறைத் தண்டனையோ (அ) ரூ 10,000-வரை

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்,
உங்களிடம் பெண்கேட்டு வருபவரிடம்
மார்க்க பக்தியும் நற்பண்புகளும்
உங்களுக்குத் திருப்தி அளிக்குமாயின்
அவரின் பணத்தையும் குலத்தையும்
பார்க்காது மணம் செய்து கொடுத்து
விடுங்கள். இவ்வாறு நீங்கள்
செய்யாவிடின் உலகில் குழப்பமும்
பூசலும் பெருகிவிடும்.**

*அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி)*
*நூல்: திர்மிதீ*

அபராதமோ (அ) இரண்டுமோ தண்டனையாக வழங்கப்படும். (அவ்வாறு விதிக்கப்படும் அபராதமானது நீதிமன்றத் தீர்ப்பைப் பொறுத்து அக்கணவனுடைய மனைவிக்கு நஷ்ட ஈடாக வழங்கப்படலாம்.)

ஒருவேளை கணவன் வரதட்சணை கேட்க மாட்டேன் என்றும், தாம்பத்ய உரிமைகளைக் கொடுப்பேன் என்றும் எழுத்து மூலமாக வாக்குறுதிகளைக் கொடுக்கும் பட்சத்தில் தண்டனையிலிருந்து தப்பலாம்.

இச்சட்டத்தின் கீழ் குற்ற நடவடிக்கைகளை, நகர மாஜிஸ்திரேட் (Metropoletioin Magistrate) குற்றவியல் நீதித்துறை நடுவர் உள்ள முதல் நிலை நீதிமன்றத்தில் வழக்கிடலாம்.

நீதிமன்றத்தில் புகார் செய்ய அதிகாரம் பெற்றவர்கள்:

1. காவல்துறை அலுவலர்.

2. பாதிக்கப்பட்ட ஏதேனும் ஒரு நபர் (அ) பெற்றோர் (அ) முக்கியமான உறவுக்காரர்.

3. அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சமூக நல மையங்கள் (நிறுவனங்கள்) (மத்திய (அ) மாநில அரசில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள்)

4. வழக்கிலுள்ள பொருண்மைகளின் அடிப்படையில் நீதிமன்றமே வழக்கை நடத்தலாம்.

**வரதட்சணைஎன்பது பிடியாணை தேவைப்படும் குற்றமாகுமா?**



புலனாய்வு செய்கின்ற நோக்கத்திற்காக எனில், இது பிடியாணை தேவையில்லாக் குற்றமாக உள்ளது. அதாவது, புகார் செய்யப்பட்டவுடன் காவல்துறை அதிகாரிகள் விசாரணை செய்யலாம். ஆனால் மாஜிஸ்திரேட்டின் அனுமதியின்றிக் கைது செய்ய முடியாது.

இச் சட்டத்தின் கீழ் சமரசம் என்பது கிடையாது. மேலும் புகார் செய்தவரும் சமரசத்தில் ஈடுபட முடியாது. புகார் செய்வதற்கு இச்சட்டத்தில் கால வரையறை இல்லை.(1 ஆண்டு கால வரையறை என்றிருந்தது. 1984 -ஆம் ஆண்டுத் திருத்தத்தில் நீக்கப்பட்டு விட்டது.)

**வரதட்சணை வழக்கில் யாருக்கு நிரூபிக்கும் சுமை?**

யார் மீது குற்றம் சாட்டப்படுகிறதோ, அவரே தான் நிரூபிக்க வேண்டிய பொறுப்பாளி ஆவார்.

*(நன்றி: மனித உரிமைக் கங்காணி - திங்களிதழ்)*

# இளம் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி!



ஜம்மு காஷ்மீரின் இந்திய பாகிஸ்தான் எல்லைப் புறப் பகுதியைச் சேர்ந்த பழங்குடி இனப் பெண்ணான ரௌபியா என்ற 14 வயதுப் பெண் லஸ்கர் -இ-தொய்பா என்ற தீவிரவாதக் கும்பலினால் கடத்தப்பட்டு அக்கூட்டத் தைச் சேர்ந்த ஒருவருக்குக் கட்டாயத் திருமணம் செய்விக் கப்பட்டார். இப்பெண்ணை அவர் கணவருடன், நண்பர்களும் சேர்ந்து பாலியல் பலாத்காரம் செய்தனர். சரி யான சமயம் கிடைத்தபோது இப்பெண் தப்பிவிட்டார். இது மாதிரி பல இளம் பெண்களைத் தீவிரவாதக் கும்பல் துப்பாக்கி முனையில் மிரட்டிக் கடத்தி வருவது வழக்க மாகிவிட்டது. சுமார் 50பெண்கள் இதுமாதிரிக் கடத்தப்பட்டதாகத் தகவல் தெரிகிறது. தோடா மாவட்டத்தைச் சோந்த 15 வயமு பானு நஸீர், அஹமத் என்ற தீவிரவாதிக்கு டிசம்பர் 2005 ஆம் ஆண்டு கட்டாயத் திருமணம் செய்து வைக்கப்பட்டார். தீவிரவாதக் கும்பல் இவரது குடும்பத்தைச் சாவு அல் லது திருமணம் என்று மிரட்டி வைத்துத் திருமணம் நடத்தினர். இதில் வருத்தத் திற்குரிய விஷயம் என்னவென்றால் பாதிக்கப்படும் குடும்பங்கள் பயம் காரண மாகக் காவல்துறையை அணுகுவதில்லை. இதனால் ஜம்மு, காஷ்மீர் இளம் பெண்கள் துப்பாக்கி முனையில் படிக்காத மற்றும் அவர்களைவிட இருமடங்கு வயது அதிகம் ஆனவர்களை மணக்கும் துன்பத்திற்கு ஆளாகி வருவது வேத னைக்குரியது!

தீவிரவாதிகள் இளம் பெண்களை இரு வருடங்களுக்கு மட்டும் 'தற்கா லிகத் திருமணம்' செய்வது அதிகரித்து வருகிறது. ஷமீமா 2000ம் ஆண்டு ஒரு தீவிரவாதியை மணக்க நேரிட்டது. 2004ம் ஆண்டு தீவிரவாதி கொல்லப்பட்ட நிலையில் மூன்று குழந்தைகளுடன் 20 வயது ஷமீமா அனாதையாகி நிற்கிறார். பல பெற்றோர்கள் தீவிரவாதிகளின் கொடுமையினால் தங்கள் பெண்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் செய்து வைத்து விடும் கொடுமையும் அதிகரித்து வருகிறது. முன்பெல்லாம் 17 அல்லது 18 வயதில் பெண்ணுக்குத் திருமணம் நடந் தது. தற்போது 12 அல்லது 13 வயதிலேயே திருமணம் செய்வது அதிகரித்து வருகி றதாம். தீவிர வாதக் கும்பலினி நடவடிக்கைகளால் இளம் பெண்கள் மொட்டி லேயே கருகும் அநியாயத்தைத் தடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

OOO *-இந்திரா நன்றி: பெண்ணே நீ, ஏப்ரல் 2006*

# "முக்காடு.... மதம் சொன்னது"

**-ஆர்.சந்திரா**

கடந்த ஓராண்டுக் காலமாகவே ஐரோப்பாவில் உள்ள சீக்கியர்கள் தலைப்பாகை அணிவது பற்றியும், முஸ்லீம் பெண்கள் முக்காடு போடுவது பற்றியும் பலத்த சர்ச்சை நடந்து வருகிறது. கல்லூரி, பல்கலைக்கழகம், பள்ளிகள் என கல்விக் கூடங்களில் இது மாணவர் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. சமீபத்தில் பாகிஸ்தானில் பிறந்து, நார்வே அரசியலில் தடம் பதித்த சமீரா முனீர் என்ற பெண்ணின் மரணம் மீண்டும் இந்தச் சர்ச்சையை அதிகமாக்கியுள்ளது. நார்வேயிலுள்ள பள்ளிகளில் படிக்கும் பெண்கள் முக்காடு அணியத் தடை விதித்ததை ஆதரித்துக் குரல் கொடுத்த முதல் முஸ்லீம் பெண் சமீரா முனீர். மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆஸ்லோ நகரின் ரயில் தண்டவாளத்தில் மர்மமானமுறையில சமீரா இறந்து கிடந்தார். நார்வே மனித உரிமை சேவை சமீராவின் மரணம் பற்றிய செய்தியை வெளியிட்டது.

முஸ்லீம் பெண்கள் தங்கள் சமூகத்தில், தமக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றி வெளியே சொன்னால் என்ன ஆகும் என்ற கேள்விக்குப் பதிலாகவே சமீராவின் மரணம் பார்க்கப்படுகிறது. பெண்கள் தம் தலையைச் சுற்றி 'ஸ்கார்ஃப்' (ஹிஜிப்) அணிவது பற்றிய தனது கருத்தை மாற்றிக் கொள்ள இயலாது என அவர் கூறிவிட்டார். இறப்பதற்கு முன்பு அவர் கூறியுள்ள விஷயங்கள், அவரது உயிருக்கு மிரட்டல் தொடர்ந்து இருந்து வந்ததாகவும் தெரிகிறது. தினசரி தொலைபேசி மூலம் மிரட்டல்கள் வந்துள்ளன. தெருவில் செல்லும் போதும் முஸ்லீம் ஆண்கள் அவரைத் தொந்தரவு செய்ததுடன், கொன்று விடுவோம் என மிரட்டியுள்ளனர். அத்துடன் நிற்காமல், நார்வேயிலுள்ள பாகிஸ் தான் தூதரகத்திற்கு இரண்டுமுறை வரும்படி வற்புறுத்தப்பட்டதாக நார்வே செய்தித்தாள்களில் பாகிஸ்தானின் தூதர் ஷாபஸ் ஷப்பர் பற்றியும் சமீரா பேட்டி அளித்துள்ளார். தூதரக அழைப்புகள் சமீராவின் அரசியல் கருத்துக்கள் பற்றி விவாதிப்பதற்கு என்று கூறப்பட்டது. ஆனால் பாகிஸ் தான் தூதர் சமீராவிடம், அவரது குடும்பம் இன்னமும் பாகிஸ்தானில் வசிக்கிறது என்பதை மீண்டும் மீண்டும் கூறியுள்ளார். இது மறைமுகமாக சமீராவுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை யாகும்.

சமீரா முனீர் 20 ஆண்டுகளாக



நார்வேயில் வசித்து வருகிறார். அந் நாட்டுப் பிரஜையுமாவார். ஆஸ்லோ, நகர கவுன்சிலின் உறுப்பினர். நார்வே செய்தித்தாள்கள் அவர் மரணம் பற்றிய செய்தியை வெளியிட்டனவே தவிர, பாகிஸ்தான் தூதர் எந்த அறிக்கையும் தரவில்லை. மற்ற விஷயங்களில் எல்லாம் குரலெழுப்பும் நார்வே வாழ் பாகிஸ்தானியர் இதில் வாயே திறக்கவில்லை. சமீரா தற்கொலை செய்து கொண்டாரா என்பது தெரியவில்லை. ரயில் நிலையங்களில் 'காமிராக்கள்' கண்காணிப்புக்காக வைக்கப்பட்டும், சமீரா எப்படி இறந்தார் என்பது மர்மமாகவே உள்ளது. அந்தந்த நாடுகளின் கலாச்சாரம் தொடர்பான விஷயமாகக் கருதும் நார்வே அரசு இது போன்றவற்றில் தலையிடத் தேவையில்லை எனக் கருதுகிறது.

பிரச்சனை சமீராவின் மரணத்துடன் முடியவில்லை. நார்வேயில் வாழும் ஏராளமான பாகிஸ்தானின் இளம் பெண்கள் தங்கள் பெற்றோரின் கலாச்சாரத்திலிருந்து அன்னியப்பட்டு விட்டதுடன் நார்வேநாட்டு கலாச்சாரத்தையும் பின்பற்ற விடாமல் தடுக்கப்படுகின்றனர். நார்வே பள்ளிகளில் 'ஹிஜப்' வேண்டாம் என்று சமீரா குரல் கொடுத்தது என்பது பெற்றோரின் கட்டாயத்திற்கு அடிபணிவதற்குப் பதில் இளம் பெண்கள் 'ஹிஜப்' வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி தாங்களே முடிவு செய்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் என்று கூறப்படுகிறது. சமீராவை இஸ்லாத்திற்கு எதிரியாகவும், நார்வே வாழ் முஸ்லீம்களின் ஒற்றுமைக்கெதிரானவர் என்றும் முஸ்லீம்களால் பார்க்கப்படுகிறது.

ஹிஜப் அணியத் தடை விதிப்பை நீக்கக் கோரி ஆஸ்லோவில் நூற்றுக்கணக்கான முஸ்லிம் பெண்

கள் ஆர்ப்பாட்டம் நடத்தியது குறிப் பிடத்தக்கது. அப்பெண்கள் 2 அம்சங் களை வலியுறுத்தினர். அவை (1) ஹிஜப் என்பது முஸ்லிம் மதத்தில் கடைப்பிடிக்கப்படும் அடிப்படைக் கோட்பாடு. (2) தாங்களாகவே விரும்பி ஹிஜப் அணிகின்றனர் என்பதாகும். பிரான்சில் 'ஹிஜப்' தொடர்பான சர்ச்சை எழுந்தபோது, ஏராளமான பெண்கள் 'ஹிஜப்' அணிய வேண்டும என்ற கருத்தை வெளிப்படுத்தினர்.

செப்டெம்பர் 11 தாக்குதலுக்குப் பின் முஸ்லிம்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதால், மத அடையா ளங்களை வேண்டாம் எனச் சிலர் கருதினாலும், மதப் பழமைவாதிகள் இதுபோன்ற நடவடிக்கைகள் இஸ் லாத்தைக் கைவிடுவதற்கு ஒப்பாகும் என்று கருதுகின்றனர். 2005ல் "இப் லிஸ் கி அவுலாத்" )சாத்தானின் குழந் தைகள்) என்று உருதுமொழியில்



அனைத்துப் பாகிஸ்தான் முஸ்லிம் சங்கம் சார்பில் வெளியிடப்பட்ட பிரசு ரத்தில் நார்வே நாட்டுக் கலாச்சாரம் ஒழுங்கற்றது என்றும், அந்நாட்டுக் குழந்தைகள் முறையாகப் பிறந்தவர் கள் அல்ல என்றும் குறிப்பிடப்பட் டுள்ளது. எனவே ஹிஜப் ஒரு ஒழுங் குபடுத்தும் நடவடிக்கையாகப் பார்க் கப் படுகிறது. ஆஸ்லோ நகரப் பெண் கள் பள்ளியின் முதல்வர் ஆன்பெக் ஸ்கோஜன் சமீபத்தில் முஸ்லிம் பெண் கள் மத்தியில் இது தொடர்பாகச் சண் டை வருகிறது என்றும், ஹிஜப் அணி யும் மாணவிகள் எண்ணிக்கை அதி கரித்துள்ளதாகவும், அப்படி ஹிஜப் அணியாத மாணவிகளை விபச்சாரி கள் எனக் குறிப்பிடுவதாகவும் தெரி வித்துள்ளார். கல்விக்கூடங்கள் சர்ச் சைக்கூடங்களாய் மாறியுள்ளது உண் மையிலேயே கவலை அளிப்பதாக உள்ளது.

இந்த சர்ச்சை மட்டுமல்ல கட் டாயத் திருமணங்களை எதிர்த்து நார்வே வாழ் பாகிஸ்தான் பெண்கள் தங்கள் குடும்பத்தினரிடமிருந்து தங் களைக் காப்பாற்றும்படி கேட்டு, நிவா ரண மையங்களை அணுகுவது அதி கரித்துள்ளது. மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் போலவே இங்கு வசிக்கும் பெண்கள் காலம் காலமாகப் பின்பற் றும் பழக்க வழக்கங்களை மீறுகை யில், உயிருக்கே பாதுகாப்பு இல்லாத சூழலில் இருக்கின்றனர். புதிய சட்ட அடையாள அட்டை, புதிய முகவரி கள், கையில் எடுத்துச் செல்ல அலா ரம் ஆகியவை அளித்த பின்பு, இப்

பெண்கள் தம் பெற்றோரால் மிரட்டப் படுகின்றனர்.

இளம் பெண்களின் பயத்திற்குக் காரணம் உண்டு. சமீராவின் மரணத் திற்குச் சில மாதங்கள் முன்பு, ரஹிலா இக்பால் என்ற 20 வயது பாகிஸ்தான் பெண், பாகிஸ்தானுக்குச் செல்லும் போது கொல்லப்பட்டார். குடும்ப விடு முறை கழிக்க என்று பொய் சொல்லி அவரை அவரது குடும்பத்தினர் பாகிஸ்தானுக்கு அழைத்துச் சென்று அங்கு அவரைக் கொல்ல ஏற்பாடு செய்தனர். பஞ்சாபில் (பாகிஸ்தான்) ரஹீலாலை அழைத்துச் சென்று பாலி யல் பலாத்காரம் செய்து, கார் விபத்து என ஜோடனை செய்து குடும்பத்தா ரே கொலைக்கு ஏற்பாடு செய்து கொடூரம் நிகழ்ந்துள்ளது. ரஹீலாவின் காதல் திருமணத்திதால் குடும்ப கௌரவம் பாதித்தது என்று அவளது அம்மாவே இந்தக் கொலைக்கு உடந்தையாக இருந்துள்ளார். (பேயானாலும் தாய் என்பார்களே!) நார்வே நீதிமன்றத்தில் தற்போது, ரஹீலா குடும்பத்தினர் மீது வழக்கு நடக்கிறது. பெண்கள் குடும்ப கௌரவத்தின் அடையாளமாகப் பார்க்கப்பட்டு அவர்கள் உயிரையே பறித்து விடுகின்றனரே!

2005ல் துருக்கியில் ஹிஜப் தொடர்பாகத் தரப்பட்ட தீர்ப்பு என்ன சொல்கிறது?

இஸ்தான்புல் பல்கலைக் கழகத் தில் லைலா ஹசீன் என்ற பெண் ஹிஜப் அணிந்து பரீட்சை எழுதவந்த தற்குத் தடை விதித்த போது, அது



அவளின் மனித உரிமை மீறல் அல்ல எனக் கூறியது. துருக்கியின் உச்ச நிர்வாக நீதி மன்றத்தின் முடிவை மேற் கோள் காட்டி, "ஹிஜப் கட்டிக் கொள்வ தென்பது சாதாரணப் பழக்கம் என்ப தைத் தாண்டி, பெண்களின் சுதந்திரத் திற் கெதிரான பார்வையின் அடை யாளமாக மாறி விட்டது" எனக் கூறப் பட்டது. இந்த முடிவு வெளிவந்த சில மணி நேரத்தில் ஐரோப்பாவில் உள்ள முஸ்லீம் குழுக்கள் ஐரோப்பிய நீதி மன்றங்களின் 'இஸ்லா மோஃபோபி யா' வைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிடப்பட்டன. முஸ்லீம் தீவிர வாத அமைப்புகள் கடுமையான வார்த் தைகளைக் கொண்ட அறிக்கைக ளை வெளியிட்டன.

சமீரா முனீர் மட்டுமல்ல, பெண் களைப் பாரபட்சமாக நடத்தும் பழக் கங்களை எதிர்த்துக் குரல் கொடுக் கும் பெண்களின் குரல்வளைகளும் நெறிக்கப்படுகின்றன. இராக்கில் பாக்தாதிலுள்ள பிரபல மருந்துக்

கடை சொந்தக்காரரான ஜீனா அல் குஷ்டெய்னி, மேற்கத்திய உடைகளை அணிவதாலும், பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்ததாலும் கொல்லப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஹஷிமியா, நிஸ்ரீன் முஸ்தபா அல்புராவதி, அணல் அல் மாமலச்சி என பல பெண்கள் கொல்லப்பட்டனர். யானர் முகமது என்ற இராக்கியப் பெண்கள் உரிமை அமைப்புத் தலைவர் தனிநபர் சட்டத்திற்குப் பதிலாக ஷரியா சட்டம் அமுலாகக் கூடாது என்று குரலெழுப்பியதற்கான மிரட்டப்பட்டார்.

ஆப்கானிஸ்தானில் பெண்கள் பிரச்சனைகளில் தலையிட்டு, அவர்களுக்காதரவாகச் செயல்பட்டதற்காகக் கடந்த ஆண்டு மட்டும் 5 பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். 'அவுரத்' என்ற மகளிர் உரிமை அமைப்பின் ஊழியரான சுபைதா பேகம், பாகிஸ்தானில் பஞ்சாயத்துத் தேர்தலில் பெண்கள் பங்கேற்க வேண்டுமென்று பிரச்சாரம் செய்தார். வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும்போது கொல்லப்பட்டார். வன்முறைக் கெதிரான அமெரிக்க ஆசிய அமைப்பைச் சார்ந்த பெண்ணுரிமைப் போராளி ஆம்னா பட்டர் ஒரு பேட்டியில் "நியூயார்க் தெருவில் வெகு சுலபமாக வேண்டாதவர்களைத் தீர்த்துக்கட்டிவிட எங்களால் முடியும்" என்று பாக் அரசின் உயர் அதிகாரி கூறியதாகத் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானியப் பெண்கள் பலாத்காரம் செய்யப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுக்கும் பெண்கள் அமெரிக்காவில் கூடப் பாதுகாப்பாக இருக்க முடியாது என்கிறார்.

2006 ஜனவரி 8, பிரபல பாகிஸ்தான் பெண்ணுரிமைப் போராளி மீது அடையாளம் தெரியாத நபர் சுட்ட போது, அவற்றைக் கண்காணிக்கும் ராணுவம் எந்த உதவிக்கும் வரவில்லை. ஹிஜப் அணிவதால், உயிருக்குப் பாதுகாப்பு எனன்ற நிலையில் நிறைய முஸ்லிம் பெண்கள் உள்ளனர். இந்த ஆண்டு மார்ச் 8 சர்வதேசப் பெண்கள் தினத்தன்று சாதி, மதம்,இனம், மொழி, நாடு கடந்து பெண்களின் நியாயமான உரிமைகளுக்குக் குரலெழுப்பும் பெண்களுக்கு, மனிதர்களுக்கு ஆதரவாகச் செயல்பட முடிவெடுப்போம்.

(ரபீக் ஜக்ரியா என்ற வழக்கறிஞரின் ஆங்கிலக் கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.) ooo



**நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**
**குறைந்த செலவில் நடைபெறும் திருமணமே பரக்கத்தால் நிறைந்ததாகும்.**

*அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி)*
*நூல்: பைஹகீ*

# நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு...

அது யார்கிட்டேயும் பேசுறதில்லே. சதா எந்நேரமும் கதவைத் தாழ் போட்டுக் கொண்டு உள்ளேதான் இருக்கும் என்றார்கள் மாமி.

சில மாதங்கள் சென்றன. கொஞ்சம் கொஞ்சமாகப் பேசிப் பழக ஆரம்பித்தேன். இப்போது தன் கதையை என்னிடம் சொல்லுமளவுக்குப் பழக்கம் ஏற்பட்டது. தயக்கத்துடன், பல சந்தர்ப்பங்களில் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களை மனம் விட்டுப் பேசினாள்....

மெஹர் பானுவின் சொந்த ஊர் சேலம். தந்தை ஒரு சிறிய ஓட்டலின் சொந்தக்காரர். தாய் மற்றும் ஒரு அண்ணனுடன் நான்குபேர் கொண்ட சிறிய குடும்பம். அதிக வசதி இல்லாவிட்டாலும் தந்தையின் செல்லப் பெண் அவள். மெஹர் பத்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தாள். படிப்பில் சுமார்தான் எனினும் பார்க்க லட்சணமாக இருந்தாள். எதேச்சையாக ஒரு நண்பர் மூலம், நாகூரிலிருந்து ஒரு குடும்பம் மெஹரைப் பெண் கேட்டு வந்தார்கள். மாப்பிள்ளை பார்க்க நன்றாக இருந்தார். அவருக்கு ஒரு அண்ணன் மற்றும் இரு சகோதரிகள். அனைவருக்கும் மணமாகிவிட்டது. நல்ல குணமான பையன் என நண்பர் சொன்னார்.

மகள் சிறிய வயதினளாக இருக்கிறாள் என்கிற தயக்கம் மெஹரின் தந்தைக்கு இருந்தாலும், நல்ல இடத்தை விடவேண்டாம் என்கிற நினைப்பில் சம்மதம் தர, திருமணம் முடிந்தது. பிறந்த வீட்டில் செல்லப் பெண்ணாக வளர்ந்ததால் மெஹருக்குச் சமையலறை எப்படி இருக்கும் என்று கூடத் தெரியாது. இரண்டு பேருக்கு டீ போடக்கூடத் தெரியாமல் புகுந்த வீட்டில் நிரம்பக் கஷ்டப்பட்டாள். ஒரு பக்கம் குடும்ப வாழ்க்கை என்னவென்று தெரியாமல் கணவரைக் கண்டு பயம், பகலில் வீட்டு வேலையில் கடினம் எனத் திணறிக் கொண்டிருந்தாள்.

இந்நிலையில் அவளுக்கு ஆறுதலாய் இருந்தவர் அவள் கணவர். அவளின் நிலையைப் புரிந்து கொண்டு சிறிய வயதுப் பெண்ணாக இருக்கிறாள் என்று விட்டுக் கொடுத்து வாழ்ந்து வந்தார். அவர் கவலையெல்லாம் ஒரு மாதத்திற்குப் பின் தம் மனைவி எப்படி சமாளித்துக் கொள்ளப் போகிறாள் என்பதே.

ஆம். அவர் சவுதியில் பணிபுரிபவர். திருமணத்திற்காக 3 மாத விடுப்பில் வந்தவர். இன்னும் விடுப்பு ஒரு மாதம் தான் உள்ளது. என்றவாறு யோசித்தபடியே



ஒருமாத விடுப்பும் முடிந்து அவர் செல்ல வேண்டிய நாளும் வந்தது. அவருக்குத் தன் மனைவியிடமும் மனம் விட்டுப் பேச முடியாத சூழ்நிலை. அனைவரிடமும் விடை பெற்றார்.

அதன் பிறகு சேலத்தில் உள்ள பிறந்த வீட்டில் ஒரு சில நாட்கள் தங்கி யிருந்து விட்டு மெஹர் மீண்டும் மாமியார் வீடு வந்தார். அங்கேயே வெகுநாட்கள் கழிந்து கொண்டிருந்தன. வீட்டு வேலை பழக்கமில்லாததால் வெகு நேரத்தை அடுப்படியில் செலவழித்தபடி காலம் தள்ளிக் கொண்டிருந்தாள் மெஹர். அவள் நாத்தனாருக்குத் திருமணம் முடிந்தது. இருந்தாலும் அவள் தன் பிள்ளைக ளுடன் தாய் வீட்டிலேயேதான் இருந்து வந்தாள்.

மெஹரின் தந்தை வந்து மகளைஅழைத்துக் கொண்டு போகக் கேட்டால், அவளை வேலை செய்யத் தெரியாத பெண்ணாக வளர்த்து வைத்திருப்பதைக் குத்திக் காட்டிப் பேசி மறுத்துவிடுவார்கள். அதையும் மீறி எப்பவாவது அனுப்பி னாலும் ஓரிரு நாட்களில் திரும்ப வந்துவிடும்படி கட்டளையிடுவார்கள். இப்ப டியே இரண்டரை வருடங்கள் ஓடின. கணவர் திரும்பவும் இந்தியா வருவதாகத் தகவல் வந்தது. மெஹர் அளவற்ற சந்தோஷம் அடைந்தாள்.

இரண்டு மாத விடுப்பில் கணவர் ஊருக்கு வந்தார்.

இந்த இரண்டு மாதங்கள்தான் அவள் வாழ்க்கையில் கண்ட இறுதியான மகிழ்ச்சி நாட்கள்.

இரண்டு மாதத்தில் மெஹரின் தாய் வீட்டுக்கு அழைத்துப் போய்த் தங்க விட்டு மற்றும் சில சுற்றுலா இடங்களுக்கும் மனைவியுடன் சென்று மகிழ்ச்சி

யுடன் இருந்தனர். இரண்டு மாதங்கள் கழித்துத் திரும்பவும் வெளிநாடு சென்று விட்டார் மெஹரின் கணவர்.

அவர் சென்ற அடுத்த மாதத்தில் மெஹர் மாதமாக இருப்பதை அறிந்து மகிழ்ந்தார் அவள் கணவர்.

ஆனால், இங்கே மெஹர் வயிற்றில் குழந்தையுடன் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளைத் தாய் வீட்டிற்கும் விடவில்லை கணவன் வீட்டார். பிறகு பிரசவகாலம் நெருங்கியவுடன் பெரும் பிரச்சனைக்கிடையில் தாய் வீடு சென்றாள் மெஹர். அழகான பெண் குழந்தை பிறந்தது.

ஆனால், அதன் பிறகு கணவன் வீட்டார் வந்து மெஹரை அழைத்துச் செல்லவேயில்லை. அவ்வப்போது பெரிய நாத்தனாரின் கணவர், மனிதாபிமானத்துடன் வந்து பார்த்து விட்டு, ஆறுதலாகவும், அன்பாகவும் பேசிவிட்டுச் செல்வார்.

இந்நிலையில் மெஹரின் கணவரும் தாம் வந்தபின் பார்த்துக் கொள்ளலாம் எனச் சொல்லிவிட்டார். குழந்தைக்குத் துணிகள், விளையாட்டுப் பொருட்கள் வாங்கி அனுப்பியுள்ளார். அப்பா வீட்டிலேயே இருக்கும்படியும் கூறியுள்ளார்.

குழந்தை ரஜியாவுக்கு இரண்டுவயது நெருங்கிக் கொண்டிருந்தது. ஒரு நாள் காலை நாத்தானாரின் கணவர் வந்தார். அவரை அமரச் சொல்லிவிட்டு டீ போடுவதற்காகச் சமையலறைவரை சென்றாள் மெஹர். ஹாலில் அம்மாவின் அழுகைச் சத்தம். பதறிப்போய் ஓடிவந்தாள் மெஹர். அப்பா அப்படியே நாற்காலியில் சாய்ந்திருந்தார். அம்மா தலையில் அடித்தபடி கதறிக் கொண்டிருந்தார். மெஹர் வந்த என்னவென்று கேட்டாள். கேட்டவளுக்குத் தலையில் இடி விழுந்தது! அவள் கணவர் சவுதியில் இறந்து போய் விட்டாராம்!!

மெஹரின் வாழ்வில் அதன்பின் அடுக்கடுக்கான சோதனைகள். தந்தைக்கு நெஞ்சுவலி வந்து அதே நாள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அன்று விழுந்தவர்தான். பிறகு மீளவேயில்லை. ஆறு மாதத்தில் படுத்த படுக்கையாகி தன் அன்பு மகளை விட்டுப் பிரிந்தார்.

மாமியார் வீட்டிலிருந்த யாரும் ஆறுதல் சொல்லக்கூட வரவில்லை. விபத்தில் இறந்ததாகச் சொல்லப்பட்ட தன் கணவனின் உடலைக் கூடப் பார்க்க முடியாத பாவியானாள் மெஹர்.

தந்தை மறைவுக்குப் பின் அண்ணனின் உதவியோடு மாமியார் வீட்டுக்கு வந்தாள் மெஹர். கணவருடன் வாழ்ந்த வீடு மாமியாரின் சொந்த வீடு. அக்கம் பக்கம் உள்ளவர்களை வைத்துப் பேசி மெஹருக்குப் பெண் குழந்தை இருப்பதால் அவளுக்கு ஒரு பங்கு கொடுக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

மெஹரின் திருமணத்தின் போது மெஹரின் தந்தை தன் சக்திக்கு மீறி வரதட்சணை கொடுத்துத் திருமணம் முடித்திருக்கிறார். அதற்குப் பிறகும், அவ ளின் பிரசவத்தின் போதும் சிசேரியன் கேஸ் என்பதால் கடன் வாங்கிச் செய் திருக்கிறார். மகளின் வாழ்க்கை பற்றிய கவலையில் வியாபாரத்தையும் கவனிக்க முடியாமல் நட்டமடைந்து இறக்கும்போது கடனை மட்டுமே வைத்துச் சென்றிருந்தார்.

மெஹருடைய அண்ணனும் நிறையப் படிக்காதவர். பிறகு காரைக்காலில் தற்காலிகமான ஒரு வேலையைத் தேடிக் கொண்டு தன் தாய் மற்றும் சகோ தரியுடன் வாடகை வீடு பார்த்துக் குடியேறினார்.

மெஹருடைய மாமியார் வீட்டின் ஒரு பாகத்திற்கு ஈடாக ரூ. 50,000 கொடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அந்தப் பணத்தை குழந்தை ரெஜி பெயரில் வங்கியில் டெபாசிட் செய்து, அதற்குக் கார்டியனாகத் தன்னைப் போட்டுக் கொண்டு, ரெஜி மேஜராகும் வரையிலும், தனக்குப் பிறகும் தான் அந்தப் பணம் ரெஜியைச் சேருமாறு டெபாசிட் செய்தார். அதற்கான வட்டித் தொகையை மூன்று மாதத்திற்கு ஒரு முறை வாங்கி ரெஜியின் படிப்புச் செல வைப் பார்த்துக் கொள்ளக் கூறினார். அதன் பின் மாமியார் வீட்டோடு மெஹ ருக்கு எந்த உறவும் இல்லாமல் போனது.

சில வருடங்கள் ஓடின. காரைக்காலில் இருந்த மெஹரின் அண்ணனுக் குத் திருமணம் செய்யலாம் என அவரின் தாய் நினைத்தார். ஆனால் மெஹர் தன் தாய் வீட்டில் இருந்ததால் அண்ணனுக்கு வந்த வரன்கள் தட்டிப் போயின. மனம் நொந்தாள் மெஹர்.

காரைக்காலில் பரீதா என்பவரின் குடும்பம். அருகில் இருப்பதால் நல்ல பழக்கம். மெஹரின் நிலையை நன்கு அறிந்தவர். இரக்க குணம் உடையவர்.



**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்**
**நீங்கள் உங்கள் மனைவியரை அடிமையை அடிப்பது போன்று அடிக்க வேண்டாம். ஏனெனில் பிறகு அதே நாளின் இறுதியின் இரவில் அவளுடனேயே நாணமில்லாமல் உறவு கொள்வீர்கள்.**

*- அறிவிப்பாளர்: அப்துல்லாஸ் இன்னு ஸம்ஆ (ரலி) நூல்: புகாரீ*

மெஹருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என் நினைத்தார். பக்கத்து ஊரில் உள்ள உறவினர் மூலமாக மெஹருக்கு மறுமணம் செய்யப் பேச்சை எடுத்தார்.

ஆரம்பத்தில் மறுத்தாள் மெஹர். ஆனால் கொஞ்சங் கொஞ்சமாக மனதை மாற்றினர். பதினேழு வயதிலேயே வாழ்க்கை இப்படியாகிவிட்ட மெஹருக்கு வெளிச்சம் வராதா என ஏங்கிய தாயும் சம்மதித்தார்.

இப்படியாகப் பக்கத்து ஊரிலுள்ள அஜீஸ் என்பவரின் மனைவியானார் மெஹர்.

அஜீஸ் ஏற்கெனவே திருமணமானவர். வயது நாற்பதுக்குள். ஏனோ அவர் மனைவி அவரை விட்டுச் சென்று விட்டாள். அதற்குப் பலர் பல காரணங்கள் கூறுகின்றனர். உண்மை தெரியவில்லை. ஆனால் அவர் நல்லவர். எந்த வம்புக்கும் போக மாட்டார். தெருவில் கூடக் குனிந்த தலை நிமிர மாட்டார். தானுண்டு தன் வேலையுண்டு என இருப்பார். இப்படித்தான அஜீஸ் பற்றிக் கூறினர். மனைவி போன பிறகு மன நிம்மதிக்காக ஒரு சிறுவனை வளர்த்து வருகிறார். அந்தப் பையன் இந்து. இவர் முஸ்லீம் பெயரிட்டு இஸ்லாமியப் பழக்கமுடன் நல்ல முறையில் வளர்த்து வருகிறார். அவனும் இவரிடம் பாசத்துடன் இருக்கிறான்.

மெஹர் தன் பத்து வயதுப் பெண் குழந்தையுடன் அஜீஸின் வீட்டிற்கு வாழ வந்தாள். அஜீஸிற்குத் தாய் தந்தை இல்லை. உறவு என்று சொல்லிக் கொள்ளவும் எவரும் இல்லை.


தனியான ஒரு வாடகை வீட்டில் மெஹர், அஜீஸ், அவருடைய பையன், ரெஜி ஆகிய நால்வரும் வசித்தனர். நாட்கள் சென்றன. மெஹருடைய அண்ணனுக்கும் திருமணம் முடிந்தது. மெஹர் நல்லவிதமாக வாழ்வதாக அனைவரும் எண்ணிக் கொண்டிருந்தனர். அவளும்அப்படியே காட்டிக் கொண்டு வெளியில் எதுவும் சொல்லாதவளாய் மறைத்து வந்தாள்.

அப்படி என்னதான் மறைத்தாள் மெஹர். தன் கணவர் ஆண்மையற்றவர் என்பதை ஒரு பெண் எப்படி வெளியே சொல்ல முடியும்? அதுவும் மெஹரின் நிலைமையில் உள்ள ஒரு பெண்?

இரண்டாண்டுகால இவளின் மௌனம், அவரின் தாழ்வு மனப்பான்மையை மேலும் வளர்த்தது. ரெஜியைப் பார்த்தாலே கோபப்பட, திட்ட ஆரம்பித்தார். அவருக்கு முன் அவள் சாப்பிட்டால் அவ்வளவுதான். மெஹரை அடித்து நொறுக்கி விடுவார். சித்ரவதைகள் தொடர்ந்தன.

தாய்க்கும் மகளுக்கும் எவ்விதச் செலவும் செய்வதில்லை. மருத்துவச் செலவு கூட. சாப்பாட்டைத் தவிர எதையும் எதிர்பாராதே என நடந்து கொண்டார். அந்தச் சாப்பாடு கூடச் சில நாட்களில் மூன்று வேளை கிடைக்காது.

வேலை இல்லை என்று காரணம் கூறுவார். என்றாலும் மெஹர் அங்கிருந்து வெளியேற வில்லை. ரெஜியையும் மெஹரையும் அடித்து நொறுக்கினார்.



அவருடைய வளர்ப்பு மகன் ஒரு கடையில் வேலை செய்து கொண்டி ருந்தான். அவன் தான் மெஹரின் மீதும் ரெஜியின் மீதும் பாசமாக இருந்தான். அவ்வப்போது செலவுக்கும் ஏதாவது பணம் கொடுத்து வந்தான்.

இது அஜீஸிக்குத் தெரிய வந்தது. கோபம் உச்சமடைந்தது. தகாத வார்த்தைகளால் மனைவியைத் திட்டியடி அடித்தார். ‘வீட்டை விட்டு வெளியே போ’ என்று விரட்டியடித்தார்.

மெஹர் அதற்குமேல் பொறுக்கமுடியாமல் திருமணம் முடித்து வைத்த வரின் வீட்டுக்கு வந்தாள். நடந்ததைக் கூறினாள். என்ன செய்வதென்று அவர் கள் குழம்பிப்போய் அஜீஸை அழைத்துப் பேசினர். அவர் நல்லவர் போல், தான் எந்தத் தப்பும் செய்யவில்லை என்று கூறினார். பிறகு, பேசி மீண்டும் சேர்த்து வைத்தனர்.

சிறிது நாள் கழித்து மீண்டும் இது போலக் கொடுமைகள் தொடர்ந்தன. ரெஜியும் பெரியவளானாள். அஜீஸின் கொடுமைகளால் அவருடைய வளர்ப்பு மகன் வீட்டுக்கே வராமல் வெளியில் தங்கி விட்டான். அதற்கும் மெஹர் தான் காரணம் எனக் கூறி அடித்தார். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மகள் மனதளவில் பாதிக்கப்பட்டாள்.

இனியும் பொறுமை காத்தால் மகளின் வாழ்வு பாதிக்கப்படும் என நினைத்து வீட்டை விட்டு வெளியேறினாள் மெஹர். திரும்பவும் தாய் வீடு.

ரெஜி இப்போது கல்லூரியில் மூன்றாமாண்டு பயில்கிறாள். ஆனாலும் அந்த வயதிற்கே உரிய கலகலப்பும் சுறுசுறுப்பும் அவளிடம் இல்லை. யாரிடமும் அதிகம் பேசுவதுமில்லை மெஹரைப் போல.

முடிந்து போன வாழ்க்கையைக் கெட்ட கனவாக நினைத்து மறக்க விரும்புகிறாள் மெஹர். எதுவும் மகளுக்குத் தெரிய வேண்டாம் என நினைக் கிறாள். ஆனால் எல்லோரையும் போல மறப்பதாக எண்ணி நினைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறாள் மெஹர்.

**– ஹம்சூன்**

ooo

இயக்கச் செய்திகள்:

# மாநில அளவிலான முஸ்லீம் பெண்களின் உரிமை கோரும் உண்ணாவிரதம்-தூத்துக்குடி

**தூ**த்துக்குடி மாவட்டம் காயல்பட்டினம் மற்றும் திரேஸ்புரம் பகுதிப் பெண்கள் அந்தவிதமான அடிப்படை வசதிகளும் இலலாமல் தங்களது காலைக்கடன்களைக் கழிப்பதற்கே வீட்டில் கழித்து அந்த மலத்தைக் கடலில் அள்ளிப்போடும் நிலையில் இன்று வாழ்ந்து வருகிறார்கள். இந்த நிலையை ஸ்டெப்ஸ் நிறுவனத்தினரும், தமிழகப் பெண்கள் ஜமாத்தும் நேரில் பார்த்து அதற்கான தீர்வுகளை நோக்கி நகரும் போது ஒரு சிறிய போராட்டத்தின் மூலம் அரசிற்கும், பெண்களுடைய நல்வாழ்விற்காக செயலாற்ற வேண்டிய மத அமைப்புகளுக்கும் சில கோரிக்கைகளை வைக்க வேண்டும் என்று முடிவு செய்தது. இதற்கு அந்த ஊர் ஜமாத் மற்றும் பிற முஸ்லீம் அமைப்புகள் ஒன்று சேர்ந்து அந்தப் பகுதிப் பெண்கள் ஜமாத் பிரதிநிதியான ஜீபைதா பேகத்திற்கும் அவரது குடும்பத்தினருக்கும் கொடுத்த மிரட்டல்களும் பிட் நோட்டீஸ் அடித்தும் கேவலப்படுத்த முயன்றனர். அவை



அனைத்தையும் மீறி ஜீபைதாவின் உறுதியும் அவர் திரேஸ்புரம் மற்றும் காயல்பட்டினம் முஸ்லீம் பெண்களின் நலனுக்காகவும் துணிந்து நின்றார். ஸ்டெப்ஸ் குழுவி னருக்கு இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் மூலம் உள்ளூர் ஜமாத்தின் ஒரு தலைப்பட்சத் தீர்ப்புகளுக்கான நியாயம் கேட்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தினர். இதனால் 23.06.2006 அன்று காலை 11 மணி முதல் மாலை 3 மணிவரை அண்ணாநகர் 7-வது தெரு, மெயின் ரோடு, பழைய பேருந்து நிலையம் அருகில் தூத்துக்குடியில் 500 முஸ்லீம் பெண்கள் முன்னிலையில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. உண்ணா விரதத்தின்போது முஸ்லீம் பெண்களின் நல்வாழ்விற்காக அரசு



மற்றும் மத அமைப்புகளிடமிருந்து கேட்கப்படும் கோரிக்கைகள் வாசிக்கப்பட்டன. இந்த உண்ணாவிரதம் முடிந்த பின்னர் ஜீனைதா மற்றும் உண்ணா விரதத்தில் கலந்து கொண்ட ஐம்பது உள்ளூர் முஸ் லீம் பெண்களை ஜமாத்திலிருந்து விலக்கி வைப்பதாக மத அமைப்புகள் அறிக்கை விட்டனர். முஸ்லீம் பெண்களின் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து அவர்களது நல்வாழ் விற்கு உத்திரவாதமும் வழிமுறையும் செய்து கொடுக்க வேண்டும் என்ற உணர்வுகள் கூட இல்லாமல் வாழ்ந்தவர்கள், எனக்கு இது தேவை அதை ஏன் கொடுக்க மறுக்கிறாய் என்று குரல் எழுப்பினால் அவர்களை ஜமாத்தை விட்டு விலக்குவது என்ற முடிவை எடுக்கின்றனர். இதுதான் மதத்தில் சொல்லப்பட்டுள்ளதா? மத அமைப்புகளுக்கு என்று வரையறுக்கப்பட்ட கடமைகளை அவர்களுக்கு எப்படி உணர்த்த முடியும்? சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜாதி மதம் பாராமல் இஸ்லாமிய அமைப்புகள் உதவ முன் வந்தார்கள். தமிழ்நாட்டில் சுனாமி நிவாரணப்பணிகளில் பெரும் பங்கேற்ற முஸ்லீம் அமைப்புகள் தங்களுக்கு உதவுமாறு இந்த உள்ளூர் ஜமாத்தினர் ஏன் கேட்கவில்லை? எந்த ஒரு கலவரமாக இருந்தாலும், இயற்கைச் சீற்றமாக இருந்தாலும், போராட்டமாக இருந்தாலும் தொன்று தொட்டு நடந்துவரும் கொடுமைகள் என்னவென்றால், பெண்கள் மட்டுமே இவை அனைத்திலும் பலியாகக் கூடியவர்களாக இருக்கின்றனர். உலகத்தின் எங்கோ ஓர் மூலையில் குண்டு வெடித்தால் அதன் எதிரொலி இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள முஸ்லீம்கள் பள்ளியிலும் வீட்டிலும் அங்குள்ள பெண்களை விசாரணை என்ற பெயரிலும் அச்சுறுத்தலும் நடந்து வருகிறது. எங்கோ நடக்கும் நிகழ்வு களின் தாக்கங்கள் இப்படி இருக்க, உள்ளூரில் வாழும் முஸ்லீம் இன மக்க ளின் நல்வாழ்வைப் பற்றிப் பேசாமல் செயல்படாமல் இருக்கும் ஆண்கள், தேவையைப் பெண்கள் உணர்த்த முன்வந்தால் அவர்களைக் கேவலப் படுத்துவதுதான் இவர்கள் அறிந்த இஸ்லாம். ○○○

> **எனக்கு இது தேவை அதை ஏன் கொடுக்க மறுக்கிறாய் என்று குரல் எழுப்பினால் அவர்களை ஜமாத்தை விட்டு விலக்குவது என்ற முடிவை எடுக்கின்றனர். இதுதான் மதத்தில் சொல்லப் பட்டுள்ளதா?**

# முஸ்லிம் பெண்களைத் தெரிந்து கொள்ளுங்கள்

நபிகள் வாழ்ந்த காலத்தில் போரில் கணவனை இழந்து விதவை களாக வாழ்விழந்து தவிக்கும் பெண்க ளின் மறுவாழ்வை எண்ணி 'ஷரியத்' சட்டத்தில் விதவை மணம் மற்றும் பலதார மணத்தை ஊக்கப்படுத்தியுள் ளார். ஆனால் பெண்கள் மறுவாழ்விற் காக விதிக்கப்பட்ட இச்சட்டம் ஆண் கள் எத்தனை முறை வேண்டுமானா லும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று நடைமுறைப்படுத்தப்பட்டுள் ளது.

'முத்தலாக்' என்ற மணமுறி விற்கு விதிக்கப்பட்டுள்ள எந்த விதி முறைகளும் ஆண்களால் பின்பற்றப் படாமல் முஸ்லீம் பெண்களின் வாழ் வைச் சீரழிப்பதாக உள்ளது. பெண்கள் மண முறிவிற்காக 'குலா' சொல்வதற் கான விதிமுறைகளை நடைமுறைப் படுத்தவோ, பின்பற்றவோ இஸ்லாமி யப் பெண்கள் பழக்கப்படுத்தப்படவில் லை. பெரும்பாலான பெண்கள் பருவ மடைந்தவுடன் பள்ளிக்குச் செல்லு தல் நிறுத்தப்பட்டுக் கல்வி தடைபடு கிறது.

இஸ்லாம் வரதட்சணை பெறுவ தைப் பாவமாகக் குறிப்பிட்டுள்ள போதும், வரதட்சணைக்காக அவர்கள் வதைக்கப்படுவது மதத்திற்குப் புறம்பானதாக உள்ளது.



இஸ்லாமியத் திருமணங்கள் இஸ்லாமிய முறைப்படி நடைபெறா மல், ஆண்கள் கொடுக்க வேண்டிய 'மகர்' பெண்களின் எதிர்கால வாழ் வுக்கு அடிகோலாமல் 'நிக்காஹ்நாமா' வில் எழுதப்பட வேண்டிய சில வார்த் தைகளாக மட்டுமே உள்ளது. உதாரண மாக 500 ரூபாய் 'மகர்' தொகை கொடுக்கப்பட்டு 50,000 ரூபாய் வரதட் சணையாக வாங்கப்படுகிறது. இஸ் லாத்திற்கு எதிரான இச்செயல் மிகச் சாதாரணமாக அங்கீகரிக்கப்படுகிறது.

- தொடரும்



# இஸ்லாமியச் சட்டங்களும் பெண்ணுரிமையும்

*(ஹார்மொனி என்ற ஆங்கிலப் பத்திரிகையில் ஜீலை - டிசம்பர் 2003 இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தின் தொடர்ச்சி.)*

## கல்விகற்பதற்கான உரிமை:

முகமது நபி அவர்கள் சொன்னதாக அடிக்கடி கூறப்படும் ஒரு வாக்கியம் "சீனம் சென்றாவது கல்வியைத் தேடு" என்பதுதான்.

சீனாவிற்குப் போகவேண்டியது இல்லை. நமது நாட்டில் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகளுக்கு உள்ளூரில் உள்ள பள்ளிக்கே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. பெற்றோர்கள் பெண்ணின் திருமணத்திற்காக அதிகப்படியான செலவுகள் செய்ய வேண்டியுள்ளதால், கல்விக்காகச் செய்யும் செலவு வீண் செலவாகக் கருதுவது துரதிஷ்டவசமான விஷயம்.

ஏழைக் குடும்பத்துப் பெண்ணாக இருந்தாலும், பணக்காரக் குடும்பத்துப் பெண்ணாக இருந்தாலும், பெண் கல்வி கற்றவளாக இருந்தாலும், கல்வியறிவு இல்லாதவளாக இருந்தாலும் வரதட்சணை என்ற ஒன்றின் மூலம் பெருந்தொகை கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் பெற்றோர்கள் உள்ளனர்.

இஸ்லாமியச் சமுதாயத்தில் பெண் கல்வி என்று பேசும்போது அவளுக்கு எந்தவிதமான கல்வி அளிப்பது என்பது சர்ச்சைக்குரிய விஷயமாகிறது. பொதுவாக, மருத்துவம், சமூகப் பணி போன்ற வேலைகள் இரவு தங்குதல், தெரியாத புதிய நபர்களுடன் பழக வேண்டிய வாய்ப்புகள் அல்லது தொலைத்தொடர்புச் சாதனங்கள், பத்திரிகை தொடர்பான வேலைகளில் இஸ்லாமியப் பெண் ஈடுபடுவதை இஸ்லாமியர்கள் விரும்புவது இல்லை.

பெற்றோர்கள் ஏன் இத்தனை பிரயாசைப்பட வேண்டும். கல்வி கற்பதால் என்ன பிரச்சனை வரப்போகிறது என்று பார்த்தால், பெற்றோர் இன்று தேர்ந்தெடுக்கும் கல்வி மற்றும் அது தொடர்பான வாழ்க்கை நாள் திருமணத்திற்குப் பிறகு பெண்ணின் வாழ்

வில் பிரச்சனையை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் முனைப்பாக இருக்கின்றனர்.

உண்மையில் ஒரு பெண் நல்ல குடும்பத் தலைவியாக வாழ அவள் பிறந்த, வளர்ந்த வீட்டில் அன்புடனும், பண்புடனும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும், மற்றவரை மதிக்கும் தன்மையுடனும் வளர்ந்தாலே அவளால் எங்கு சென்றாலும் சிறப்பாக வாழ முடியும். இந்த வாழ்க்கைக்கும் அவள் கற்ற கல்வி அல்லது அவள் தேர்ந்தெடுத்த வேலைக்கும் சம்பந்தமில்லை. இளம் வயதிலேயே கல்வி மறுக்கப்படுவதால் அவள் எந்த விதத்திலும் நெகிழ்வுத் தன்மையுடன் இருக்கப்போவது இல்லை. இன்னும் சொல்லப்போனால், தான் ஒரு பெண் என்பதால் அடிப்படையான கல்வி உரிமை கூட மறுக்கப்பட்டால் அவள், வெறுப்புடனும் மனதளவில் பாதிக்கப்பட்டவளாகவும் இருக்கிறாள். இந்தப் பாதிப்பையும் வெறுப்பையும் அவள் திருமணத்திற்குப் பிறகு கணவன் வீட்டிற்கு எடுத்துச் செல்கிறாள். இது அவள் தனது குழந்தையை வளர்க்கும் விதத்திலும் பிரதிபலிக்கும். இன்றைய அறிவியல் உலகில் கம்ப்யூட்டர் மூலம் தகவல் தொடர்பில் முன்னோக்கிச் செல்லும் காலத்தில் அடிப்படை அறிவை வளர்த்துக்கொள்ளவே தடை என்ற நிலை மிகவும் கேவலமானது. கேலிக்குரியது. இதனால் பெண் குழந்தைகளுக்குக் கல்வி கட்டாயம் மறுக்கப்படக் கூடாது.

பெண்ணிற்குக் கல்வி கொடுக்காமல் இருப்பதற்குச் சாதகமான மற்றொரு வாதம் உண்டு. பொதுவில் ஆண் பிள்ளைகள் அதிகம் படிப்பது இல்லை. அவர்கள் குடும்பத்துக்குரிய குலத் தொழில் செய்வதிலும் பணம் ஈட்டுவதிலும் ஆர்வம் உள்ளதால், அந்தத் தொழிலில் வேலைக்கான உத்திரவாதம் இருப்பதால் சிறு வயதிலிருந்தே குலத்தொழிலில் ஈடுபடுகின்றனர். வளைகுடா நாடுகளில் அதிக சம்பளத்தில் வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் இஸ்லாமிய ஆண் பிள்ளைகளுக்கு உண்டு. குறைந்த அளவு கல்வி இருந்தாலும் இதற்குப் போதும். இந்த வளைகுடா வேலை மோகத்தி னாலும் ஆண் பிள்ளைகள் படிப்பில் அக்கறை காண்பிப்பது இல்லை.

மறுபடியும் நம்முள் எழும் கேள்வி, அப்படியானால் ஆண் பிள்ளைகள் படிக்காததால் பெண் பிள்ளைகள் கல்வியை மறுப்பது எப்படி நியாயமாகும்?

நினைவில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம், ஒரு நல்ல படித்த பெண் குடும்பத்தலைவியாக இருந்தால் அது அந்தக் குடும்பத்திற்கே முதுகெலும்பு மாதிரி. ஒரு ஆண் கல்வி கற்றால் அதனால் அவன் மட்டுமே பயனடைகிறான். ஒரு பெண் கல்வி கற்றால் அந்தக் குடும்பமே பயனடைகிறது. குடும்பம் என்னும் ஒரு கூட்டிற்காகவும், இஸ்லாமியச் சமுதாயத்தின் மேன்மைக்காகவும், பெண் குழந்தைகள் கட்டாயம் கல்வி

கற்க வேண்டும்.

மேலும் ஆண் பெண் இருபால ரும் மனதில் கொள்ள வேண்டியது என்னவெனில், கற்பது என்பது திரும ணத்தோடு முடிவு பெறுவது இல்லை. திருமணம் என்ற ஒரு பந்தத்திற்குள் பெண் நுழைந்த பின்னர், அவளுக்குச் செய்தித்தாள்கள் படிக்கவோ, கேட்க வோ, புத்தகங்கள் படிக்கவோ, குர்ரான் படிக்கவோ, அதன் அர்த்தம் அறிந்து கொள்ளவோ நேரம் இல்லை. இன் னும் சில பெண்கள் எனக்கு எழுதும் பழக்கமே விட்டுவிட்டது. ஆகவே கடினமானதாக உள்ளது என்று கூறும் நிலையில் உள்ளோம். இந்தச் சூழ் நிலையில் ஒரு கணவன் தான் வெளி உலகம் தொடர்பாக அறிந்தவை களைத் தன் மனைவியுடன் பகிர்ந்து கொள்ளும் போது பரஸ்பரம் அவர்க ளுக்கிடையேயான உறவுகளும் பலப் படும். இது போன்ற குடும்பத்தில் வள ரும் பிள்ளைகளும் இந்தப் பழக்கத் தை முன் உதாரணமாகக் கொண்டு தங்கள் வாழ்வில் பின்பற்ற முடியும்.

*-உரிமைகள் தொடரும்*



**நீ**ங்கள் ஒரு மனைவியை விவாகரத்துச் செய்து விட்டு அவ ளுக்குப் பதிலாக மற்றொரு மனைவியை மாற்றி ( மணந்து) கொள்ள விரும்பினால், அவளுக்கு நீங்கள் ஒரு பொருள் குவியலையே (மஹ்ராகக்) கொடுத்திருந்தாலும் அதிலிருந்து எதையும் (திரும்ப) எடுத் துக் கொள்ளாதீர்கள். (அவர்கள் மீது) வீண்பழி சுமத்தியும் வெளிப் படையான பாவம் புரிந்தும் அதை நீங்கள் எடுத்துக் கொள்ளப் போகி றீர்களா?

அதாவது ஒருவர் தம் மனைவியை விவாகரத்துச் செய்து விட்டு அவளுக்குப் பதிலாக மற்றொருத்தியை மணந்து கொள்ள விரும் பினால், முதல் மனைவிக்குக் கொடுத்த மணக்கொடையிலிருந்து எதையும் திரும்ப எடுத்துக் கொள்ளக்கூடாது. அது ஒரு பொருள் குவி யலாக இருந்தாலும் சரியே!

எவ்வளவு அதிகமான பொருளையும் மணக்கொடையாக அளிக்கலாம் என்பதற்கு இந்த வசனத்தில் ஆதாரம் உள்ளது.

*(திருக்குர்ஆன் விரிவுரை. தஃப்சீர் இப்னு கஸீர். இரண்டாம் பாகம். ரஹ்மத் அறக்கட்டளை வெளியிட்ட புத்தகத்திலிருந்து சில பகுதிகள்: அத்தியாயம் : 4 அந்நிசா - பெண்கள்4:19-22)*

# சாபியாவின் கதை

*(உண்மைக்கதை; பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.)*

***கூ**கூர் கிராமத்தில் பிறந்தவர் கமால். இவருக்குத் தாய், தந்தை கிடையாது. நன்றாக உழைப்பவர் தையல் வேலை மிக நன்றாகச் செய்வார். அதே ஊரைச் சேர்ந்த இஸ்மாயில் என்பவர் இருந்தார். வீடுகள் வேலை செய்வார். அவருக்கு நான்கு பெண் குழந்தைகள். அதில் மூத்த பெண்ணாகிய மஹபூப் ஜானை மிகவும் நல்லபடியாகப் பார்த்துக் கொண்டார். இவருக்கு ஏழு குழந்தைகள். இதில் நான்கு பெண் குழந்தைகள், மூன்று ஆண்குழந்தைகள். ரஹ்மான், நசீம், சாபியா, காதர், சர்மிளா, நஜிமா, பாட்ஷா என்ற வரிசைப்படியான அவர்களுள் மூன்றாவது பெண் குழந்தையான சாபியாவின் கதை இது.*


## சாபியாவின் கதை

**சா**பியா நன்றாகப் படிப்பாள். பள்ளியில் முதல் மாணவியாக வருவாள். அவளுடைய எழுத்தும் மிக நன்றாக இருக்கும். இருந்தென்ன பயன்? தலையெழுத்து நன்றாக அமையவில்லையே!

சாபியாவிற்கு 22 வயதில் ஒரு நல்ல அரசாங்க வேலை கிடைத்தது. பள்ளியில் டீச்சராக. சாபியாவிற்கு 24 வயதில் திருமணம் செய்து வைக்கலாம் என்று வீட்டில் பெற்றோர்கள் முடிவு செய்தனர். சாபியாவின் சித்தி வீட்டின் அருகில் அப்துல்லா என்ற நல்ல பையன் ஒருவன் இருந்தான். அவனுக்குத் தந்தை இல்லை. ஒரு தம்பி உள்ளான். அவன் நல்ல பையன் என்று ஆசா பாசங்கள் காட்டி, சாபியாவை அப்துல்லாவிற்குத் திருமணம் செய்து வைத்தனர். திருமணத்திற்கு வேண்டிய அனைத்துச் செலவுகளும் சாபியாவே பார்த்துக் கொண்டாள். தாய் வீட்டின் சீதனம் என்று ஒன்றும் இல்லை.

திருமணம் நல்ல முறையில் நடந்து முடிந்தது. சாபியாவின் கணவர் அப்துல்லா சாபியாவை வேலைக்குச் செல்ல வேண்டாம். நான் உனக்குச் சம்பாதித்துத் தருகிறேன் என்று கூறி சாபியாவை வேலைக்குச் செல்ல விடாமல் தடுத்தார். இதனால் சாபியாவின் அரசு வேலை பறிபோனது.

ஐந்து மாதங்கள் முடிந்தன. சாபியா கர்ப்பமானாள். அப்துல்லா சாபியாவை நல்ல முறையில் பார்த்துக் கொண்டார். சாபியாவின் தாய் வீட்டாரிடமும் நல்ல



முறையிலும் தேவையானவைகளை வாங்கிக் கொடுத்தும் வீட்டின் மருமகனாக நடந்து கொண்டார்.

இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. ருமானா என்று பெயர் வைத்தனர். நல்ல படியாகக் குழந்தையை வளர்த்து வந்தனர். ருமானாவின் தந்தை அப்துல்லா பிழைப்பதற்காக வெளிநாடு சென்று விட்டார்.

அப்துல்லா குழந்தைக்கு வெளிநாட்டிலிருந்து விலையுயர்ந்த விளை யாட்டுப் பொருட்களும், துணிமணிகளும் அனுப்பி வைப்பார். ஆனால் சாபியா வோ தன் அண்ணன் குழந்தைகள், அக்கா குழந்தைகள் என்று எல்லோருக்கும் அவற்றைப் பகிர்ந்து கொடுத்து விடுவாள். இரக்க குணம் மிக்கவள்.

சாபியாவின் கணவர் வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை அவள் பேரில் அனுப்பாமல் அவள் தந்தையின் பேரில் அனுப்புவார். இதனால் சாபியாவின் தந்தை பணத்தை எடுத்து எல்லோருக்கும் பங்கு வைத்தார். இருப்பினும் சாபியா சிறிது சிறிதாகப் பணத்தைச் சேர்த்து இரண்டு ஏக்கர் நிலம் வாங்கினாள்.

இதற்கிடையில் சாபியாவின் சிறிய தங்கையான நஜிமாவிற்குத் திருமண ஏற்பாடு நடந்தது. திருமணத்திற்குப் பணம் பற்றாக்குறையால் சாபியாவின் இரண்டு ஏக்கர் நிலத்தையும் விற்கச் சொன்னார்கள். அவளும் விற்றுப் பணத் தையும் தன் ஐந்து பவுன் நகைகளையும் கழட்டிக் கொடுத்துவிட்டாள். சாபியா வின் தங்கை திருமணம் நல்லபடியாக நடந்து முடிந்தது.

மூன்று மாதங்களுக்குப் பின்பு சாபியா தன் தந்தையிடம் சென்று என்

நகைகள் எனக்கு வேண்டும் என்று சண்டையிட்டாள். அதற்கு சாபியாவின் அக்கா நசீம் ஒரு பெண் குழந்தைதானே வச்சிருக்க, ஏன் அடிச்சிக்கிற என்று சமாளித்து அனுப்பிவிட்டாள்.

சாபியா நகைச் சீட்டு மாதம் மாதம் கட்டிக்கொண்டு வந்தாள். இதற்கிடையில் அவள் தம்பி பாட்ஷா வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டான். விசாவிற்குப் பணம் இல்லாததால் தன் அக்காவாகிய சாபியாவிடம சென்று நகைச் சீட்டுக் கட்டும் பணத்தை எடுத்துக் கொடு. அடுத்த மாதமே கண்டிப்பாகப் பணத்தை அனுப்பி வைக்கிறேன் என்று சத்தியம் செய்தான். இதை நம்பி சாபியா பணத்தை எடுத்துத் தம்பியிடம் கொடுத்து விட்டாள். இப்பொழுது அவளுக்கு என்று சொந்த வீடு, நிலம், நகை என்று எதுவும் கிடையாது.

இப்படி இருக்க, ஒருநாள் வெளிநாட்டில் ஆங்கிலேயர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சண்டை ஏற்பட்டது. அதனால் அங்குள்ள இந்தியர்களை அவரவர் நாட்டிற்கு அனுப்பிவைத்தனர். இந்தச் சண்டையில் சாபியாவின் கணவர் மனநிலை பாதிக்கப்பட்டுத் தன் நாட்டிற்குத் திரும்பி விட்டார். சாபியாவின் கணவன் சாபியாவிடம் வராமல் அவருடைய தாய் வீட்டிற்குச் சென்று விட்டார். அங்கு அப்துல்லாவின் தம்பி தன் மனைவியுடன் தனிக்குடித்தனம் சென்றுவிட்டார். இருந்த ஒரு வீட்டையும் விற்று விட்டனர்.

இப்பொழுது அப்துல்லாவும் அவர் தாயும் ஒரு வாடகை வீட்டைப் பார்த்துக் கொண்டு பீடிசுற்றித் தன் வயிற்றைக் கழுவிக் கொண்டனர். அப்துல்லாவிற்குத் தன் மனைவி சாபியாவின் நினைப்போ, தன் மகளின் நினைப்போ எதுவும் வரவில்லை. சாபியா தன் கணவனைத் தேடி வந்து அழைத்தபோது அப்துல்லா வரமறுத்தார். சாபியாவிடம் பேசக்கூட இல்லை.




**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்,**
**நீங்கள் நிறைவேற்றிய நிபந்தனைகளில்**
**முதன்மையானது உங்கள் மனைவி யரை**
**உங்களுக்கு அனுமதிக்கப்பட்டவர்களாக**
**ஆக்கிக் கொள்வதற்காக நீங்கள்**
**(அவர்களுக்குத் தரும மஹர்)**

*அறிவிப்பாளர்: உமர்(ரவி)*
*நூல்: புகாரீ*

சாபியா மனவேதனைப்பட்டு தன் மகளை அழைத்துக் கொண்டு, தன் தாய் வீட்டிற்குச் சென்றாள். அங்கு அவளை ஒரு வேலைக்காரி போல் வேலை வாங்கியும், அவமானமும் படுத்தினர். லூசு மனைவி, லூசு பிள்ளை என்று சாபியாவையும் அவளது மகளையும் கேலி செய்தனர். சாபியா தன் அண்ணன் வீட்டில் தங்கி இருந்தாள். அந்த வீட்டிற்கு வாடகை கேட்டாள் அண்ணன். என்ன செய்வாள் சாபியா?

ஒரு பெட்டிக்கடை வைத்தாள். அதிலிருந்து வரும் சிறிய வருமானத்தில் தன் பிள்ளையைப் படிக்க வைத்தாள். தன் தங்கையாகிய நஜிமா வீட்டில் தங்கிக் கொண்டாள். நஜிமாவிற்குத் துணையாக இருக்க வேண்டும் என்று சாபியாவைத் தன் வீட்டில் தங்க அனுமதித்தார் நஜிமாவின் கணவர். சாபியா நஜிமாவைத் தன் பிள்ளை போல் பார்த்து வந்தாள்.

நஜிமாவின் கணவர் ஒரு மாத விடுமுறையில் வந்தார். இதனால் சாபியா மற்றொரு தங்கையான சர்மிளா வீட்டிற்கு அடைக்கலம் தேடிச் சென்றாள். ஒரு மாதம் முடிந்ததும் நஜிமாவின் கணவர் வெளிநாடு சென்று விட்டார். சாபியா மறுபடியும் நஜிமாவின் வீட்டிற்கு வந்து விட்டாள். நஜிமா கர்ப்பமானாள். நஜிமா கர்ப்பமானது முதல் குழந்தை பிறந்து நாற்பதாம் நாள் விழா வரைக்கும் இன்றும் தன் பணத்தைத் செலவு செய்து பார்த்து வந்தாள் சாபியா. அவளுடைய குழந் தைக்குத் துணிமணிகள் என்று வாங்கிக் கொடுத்தாள் சாபியா.

சாபியாவின் ஆசையெல்லாம் தன் மகள் ருமானாவை நல்ல படியாகத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான். நஜிமாவின் கணவருடைய தோழனுக்கு ருமானாவைத் திருமணம் செய்து வைக்கலாம் என்று முடிவு செய் தனர். ருமானாவைப் பெண் பார்க்க வந்தார்கள். ருமானாவைப் பார்த்துப் பிடித் துள்ளது என்று நண்பர் சொன்னார். பிறகு சாப்பாடு முடிந்து இரவு தூங்குவ தற்காக சாபியா தன் அண்ணனின் வீட்டில் அவர்களைத் தங்க வைத்தனர்.

ஆனால் அண்ணனோ இரவோடு இரவாக ருமானாவுக்குப் பேசியிருந்த மாப்பிள்ளைப் பையனைத் தன் மகளுக்குப் பேசி முடித்துவிட்டார். இதனால் சாபியா மனம் நோகாமல் மன தைரியத்துடன் இவன் போனால் என்ன மற்றொ ருவன் வராமலா போய் விடுவான் என்று மனதைத் தேற்றிக் கொண்டு, அதோடு தன் சுற்றத்தினரை இன்னமும் நம்பிக் கொண்டுள்ளாள்.

சுற்றத்தார் தன்னைப் பார்த்துக் கொள்வார்கள் என்று மூடத்தனமாகவோ வெகுளியாகவோ நம்பிக் கொண்டிருக்கிறாள் சாபியா. ஆனால் அவளி டமிருந்து இன்னும் எதைப் பறிக்கலாம் என்று அவர்கள், ஏற்கெனவே அவளி டமிருந்து சகலத்தையும் பறித்து ருசித்தவர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார் கள். பாவம் சாபியாக்கள்.

# தமிழக முஸ்லீம் பெண்கள் ஜமாத்

## ஒரு கண்ணோட்டம்

**இஸ்லாமும், இஸ்லாமியப் பெண்களும்:**

இஸ்லாமியப் பெண்களின் வாழ்வு- பெண் மீதான அடக்குமுறையின் இன்னொரு வடிவம். பெண்ணுக்குரிய குணங்களாக, வாழ்வாக, அடையாளமாக, வழி வழியாய்ச் சொல்லப்பட்டு வரும் அனைத்தும், அவளுடைய அடிமைத்தனத்தை நிலைநிறுத்தவே பயன்படுத்தப்பட்டுள்ளன. தன்னைச் சூழ்ந்துள்ள கலாச்சார மாயைகளிலிருந்து பெண் வெளியேறும் போதுதான், தன் மனித அடையாளம் உரிமை பற்றி அவள் உணரத் தொடங்குகிறாள். இவ்வகையில் பல்வேறு மட்டங்களில் பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள எழுச்சி, அதே வீச்சோடு ஆனால் சற்றே தாமதமாக இஸ்லாமியப் பெண்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

இஸ்லாமியர்களின் புனித நூலான திருக்குர்ஆனில் பெண்களுக்கு கல்வி, சமூக மேம்பாடு, திருமண உரிமை, மஹர் பெறுவதற்கான உரிமை, குழந்தைகளைப் பெறுவதற்கான உரிமை, விவாகரத்துப் பெறுவதற்கான உரிமை, சொத்துரிமை, பொருளீட்டுவதற்கான உரிமை, அரசியலில் பங்கேற்கும் உரிமை என இன்றைய நடைமுறை வாழ்க்கையில் அன்றாடம் பயன்படுத்தப்பட வேண்டிய உரிமைகளை, வேறு எந்த மதத்திலும் வரையறுக்கப்படாத உரிமைகளை இஸ்லாம் அன்றே பெண்களுக்கு வழங்கியுள்ளது.

**இஸ்லாமியப் பெண்களின் இன்றைய நிலை - பெண்கள் ஜமாத்தின் அவசியம் :**

ஆனால், இன்றைய காலகட்டத்தில், நம் இந்திய நாட்டில் நடை முறையில் இஸ்லாமியப் பெண்களுக்கு இஸ்லாமிய மதத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மறுக்கப்பட்டு, உணர்வுகள் சிதைக்கப்பட்டு, இரட்டைச் சங்கிலி அடிமை முறையில் பிணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களுக்கு மறுக்கப்படும் அடிப்படை மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல், மதத்தின் பெயரால், சுயநலவாதிகளால் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கூட தட்டிக்கேட்க முடியாமல் அடக்கப்படுகின்றனர். அடிப்படை உரிமைகளைக் கூடப் பெற முடியாத நிலையில் ஒடுக்கப்படுகின்றனர்.

ஆண்களையே உறுப்பினர்களாகக் கொண்ட சில ஜமாத்களும், முஸ்லீம் மக்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளும், பாதிக்கப்பட்ட முஸ்லீம் பெண்களின் பிரச்சனைகளைப் பற்றி விசாரிக்கும் போதும், முடிவெடுக்கும் போதும்



பெண்களின் பங்களிப்பு மற்றும் ஆலோசனைகள் கூட ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு ஆணாதிக்கச் சிந்தனைவாதிகளாக உள்ளனர். இவர்களின் இந்த ஒருதலைப்பட்சமான போக்கினால் தொடர்ந்து பாதிக்கப்படுவது நம்முடைய இஸ்லாமியச் சகோதரிகளே! மதம் என்ற பெயரால் இஸ்லாமியப் பெண்களுக்கு மறுக்கப்படும் நீதியும், இழைக்கப்படும் கொடுமைகளும், இனியும் தொடரலாமா?

## தமிழக முஸ்லீம் பெண்கள் ஜமாத் : உருவாக்கம்

ஆணாதிக்கச் சிந்தனை கொண்ட சில ஜமாத்களால் புறக்கணிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டு மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்ட முஸ்லீம் சகோதரிகள் ஒன்று சேர்ந்துள்ளோம். எங்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், சமூக மேம்பாட்டிலும், எம் போன்ற பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கைத் தரத்தை நிலை நிறுத்துவதற்காகவும் ஸ்டெப்ஸ் பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒருங்கிணைப்பின் மூலம் உருவாக்கப்பட்டதே தமிழக முஸ்லீம் பெண்கள் ஜமாத்.

ஸ்டெப்ஸ் பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் கடந்த ஏழு வருட காலங்களாக இஸ்லாமியப் பெண்கள் மேம்பாட்டிற்கான செயல்பாடுகளைச் செய்து வருகிறது. ஸ்டெப்ஸ் நிறுவனத்தின் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், மாநாடுகள் போன்றவற்றில் பங்கேற்ற இஸ்லாமியப் பெண்களாகிய நாங்கள் எங்களது பிரச்சனைக்கான வடிகால் தேடிநின்றோம். பிப்ரவரி 2004 ம் ஆண்டு முஸ்லீம் பெண்கள் மேம்பாட்டிற்காக நடத்திய கருத்தரங்கில் தமிழ்நாட்டின் 10 மாவட்டங்களிலிருந்து பாதிக்கப்பட்ட மற்றும் தங்கள் பாதிப்பிலிருந்து போராடி வெளிவந்த முஸ்லீம் பெண்கள் 50 பேர் கலந்து கொண்டோம். கலந்து கொண்ட ஒவ்வொரு முஸ்லீம் பெண்ணும் தனது வாழ்வில் ஆண்கள் ஜமாத்தினாலும், அது வலியுறுத்தும் இஸ்லாத்திற்கும் பெண்களுக்கு எதிரான கருத்துக்கள் மற்றும் கட்டுப்பாடுகளால் ஏற்பட்ட பாதிப்பினை விளக்கினார். ஸ்டெப்ஸ் நிறுவனம் முஸ்லீம் பெண்கள் சமூக நிலை தொடர்பாக நடத்திய ஆய்வின் விளைவுகள் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களின் சீற்றமே எங்களின் தமிழக முஸ்லீம் பெண்கள் ஜமாத். எதிர்கால இஸ்லாமியப் பெண்களின் வாழ்க்கையில் மீண்டும் ஆணாதிக்கச் சிந்தனை

கொண்ட எந்த ஜமாத்தும் தனது அதிகாரத்தையும் வன்முறையையும் வெளிப் படுத்தக் கூடாது என்பதற்காக இஸ்லாமியப் பெண்களுக்காக உருவான ஒரு கவசம் - தமிழக முஸ்லீம் பெண்கள் ஜமாத்.

**தமிழக முஸ்லீம் பெண்கள் ஜமாத்தின் நோக்கம் :**

■ சுயமரியாதையும், வாழ்வியல் உரிமைகளும், மறுக்கப்பட்டு வாழ்ந்து வரும் ஏராளமான இஸ்லாம் பெண்களுக்கு, அவர்கள் வாழ்க்கையில் நம்பிக் கைக்கு இன்னமும் இடமுண்டு என்பதை உணர்த்துவது.

■ இஸ்லாத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுவதாலும் ஆண்கள் மதம் தருவதாகச் சொல்லிக் கொள்ளும் சலுகை களாலும் பாதிப்பிற்கு உள்ளாக்கப்படும் பெண்களுக்காகக் குரல் கொடுத்து அவர்களுக்கு நியாயம் பெற்றுத்தருவது.

■ இஸ்லாத்தில் கொடுக்கப்பட்டுள்ள பெண்கள் உரிமைகளை உணரச் செய்வது.

■ மிகவும் நலிந்த நிலையிலுள்ளவர்களுக்குச் சுய தொழில் பயிற்சி மூலம் பொருளாதார மேம்பாடு அடையச் செய்வது.

■ எதிர்கால இஸ்லாமியப் பெண்களுக்கு மதத்தின் பெயரால் எழுப்பப் படும் தடைகளற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவது.

**தமிழக முஸ்லீம் பெண்கள் ஜமாத்தின் செயல்பாடுகள்/அமைப்புமுறை :**

தமிழக முஸ்லீம் பெண்கள் ஜமாத் ஐந்து உறுப்பினர் கொண்ட ஒரு நிர்வா கக் குழு மூலம் செயல்படுகிறது. இந்த நிர்வாகக் குழுவிற்கு அடுத்த நிலையில் தமிழ்நாட்டின் பத்து மாவட்டத்திலிருந்து ஒரு மாவட்டத்திற்கு இரண்டு இஸ்லா மியப் பெண்கள் என்ற அடிப்படையில் இருபத இஸ்லாமியப் பெண் பிரதிநிதிகள் உள்ளனர்.

**கூட்ட நடைமுறைகள் :**

■ ஸ்டெப்ஸ் பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் ஒவ் வொரு மாதமும், தமிழக முஸ்லீம பெண்கள் ஜமாத் கூட்டம், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அன்னவாசலில் நடைபெறுகிறது.

■ பெண்கள் ஜமாத்தின் மாவட்ட அளவிலான பிரதிநிதிகள் இக்கூட்டத் தில் கலந்து கொள்வார்கள். மேலும் மாவட்ட அளவில் பாதிக்கப்பட்ட முஸ்லீம் பெண்கள், ஆண்கள் ஜமாத்தினால் புறக்கணிக்கப்பட்டவர்கள், சமூக ஆர்வலர் கள் போன்றோரும் கலந்து கொள்கிறார்கள்.



■ஸ்டெப்ஸ் நிறுவனம் ஜமாத் கூட்டத்தின் போது பெண்ணியச் சிந்தனை யாளர்களைச் சிறப்பு அழைப்பாளராக அழைத்து பாலினப் பாகுபாடு தொடர் பான கருத்துக்களை பெண்ணிய நோக்குடன், முஸ்லீம் பெண்களுக்கு விழிப் புணர்வு அளிக்கின்றனர்.

■இஸ்லாத்தில் பெண்களது உரிமைகள் தொடர்பாக கொடுக்கப்பட்ட கருத்துக்கள் குர்ரான், ஹதீஸ், இஸ்லாமியக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு இஸ்லாமியப் பெண்களிடையே பரிமாறப்பட்டு விவாதிக்கப்படுகிறது.

■மாநில மற்றும் தேசிய அளவில் முஸ்லீம பெண்கள் பிரச்சனைகள் மற்றும் அவர்களது இன்றைய நிலை தொடர்பாக வெளியாகும் தகவல்கள் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு முஸ்லீம் பெண்களுக்கு அளிக்கப்படுகிறது.

■ஜமாத் பிரதிநிதிகள் தங்களது மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லீம் பெண்களையும் தன்னுடன் அழைத்து வந்து அவர்களது நல்வாழ்விற்காகப் பெண்கள் ஜமாத் எடுக்கும் நடவடிக்கை குறித்து விசாரித்து முடிவுகள் எடுக்கப் படுகிறது.

■முஸ்லீம் பெண்களை அதிகப் பாதிப்பிற்குள்ளாக்கும் தலாக், வரதட்ச ணைக் கொடுமை, பாலியல் வன்முறை, பலதார மணம், இள வயதுத் திருமணம் தொடர்பான பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு நோக்கிய ஆலோசனைகள் நடைபெறுகிறது. இவை ஜமாத்தின் எதிர்காலச் செயல்பாடாக, ஜமாத் மேற் கொள்ளவிருக்கும் நீண்ட பயணத்தின் போக்கை நிர்ணயிப்பதாக அமைகிறது.

■பெண்கள் மகிழ்வோடு இருத்தல் அவர்களின் மனித உரிமை. பெண் ணுக்குப் பெண் தோழியாக இருப்பது உணர்வு ரீதியான பெரிய பாதுகாப்பு என் பதை இச்செயல்பாடுகள் ஊடாகவே பெண்கள் அறிந்து கொள்கின்றனர்.

**மற்ற செயல்பாடுகள் :**

■ஸ்டெப்ஸ் பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் ஜமாத் தலைவி களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

■முஸ்லீம் பெண்களின் பிரச்சனைகளின் தன்மைக்கேற்ப, அவர்களுக் குக் குடும்ப ஆலோசனைகள் வழங்குதல், சம்பந்தப்பட்ட ஆண்கள் ஜமாத்தார் களைச் சந்தித்துப் பேசுதல், மகளிர் காவல் நிலையம் மூலம் அப்பெண்ணுக்கு நியாயம் கிடைக்கச் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுகிறது.

■மாவட்ட அளவிலான பிரதிநிதிகள் தங்கள் பகுதியில் உள்ள பிரச்சனை களை முடிந்தவரை அவர்கள் அளவில் ஜமாத் பிரதிநிதிகளாக இருந்து முடிவு

எடுக்கின்றனர். அவ்வாறு முடியாத பட்சத்தில் அப்பிரச்சனை, மாநில அளவி லான ஜமாத் கூட்டத்தில் அலசி ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

■ எதிர்கால இஸ்லாமியப் பெண் குழந்தைகளின் கல்வியின் தேவையை மனதில் கருதி, ஸ்டெப்ஸ் நிறுவனம் மூலம் கல்வி கற்க வசதி, வாய்ப்பு இல்லாத இஸ்லாமியப் பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. அவர் களுக்குப் பள்ளி கல்வி மற்றும் மார்க்கக் கல்வி பாலியல் சமத்துவ நோக்கோடு கொடுக்கப்பட்டு வருகிறது.

■ மதத்திற்குள் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்காகவும், அரசாங்கம் சிறுபான்மையினருக்கு அளிக்கும் சலுகைகளையும் இஸ்லாமியப் பெண்க ளுக்கு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பெண்கள் ஜமாத் ஒரு நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளது. இது முஸ்லீம் பெண்களின் பிரச்சனை களையும் அதன் ஆழத்தையும் பொது மக்களும், பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள இஸ்லாமியப் பெண்களும் உணர வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப் பட்ட ஒரு சிறு பிரச்சாரம் ஆகும். இது போன்ற பிரச்சாரங்களை மேற்கொள் வதும் பெண்கள் ஜமாத்தின் ஒரு செயல்பாடாக உள்ளது. மத்திய மாநில அரசுக் கும், மத அமைப்புகளுக்கும் அளிக்கும் கோரிக்கைகளை ஆயிரக்கணக்கான இஸ்லாமியப் பெண்களின் கையெழுத்துடன் அனுப்பியுள்ளது.

**பெண்கள் ஜமாத்திற்கான சாதகமான சூழல்கள் :**

■ தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் உள்ள முஸ்லீம் பெண்கள், பெண்கள் ஜமாத்தைத் தங்களது வாழ்க்கையின் வழிகாட்டியாக அங்கீகரித்த தமது பிரச்சனையை வெளிப்படுத்துகின்றனர். பெண்கள் ஜமாத்தின் தீர்வை ஏற்றுச் செயல்படுகின்றனர்.

■ தகவல் தொடர்பு மையங்கள் மூலம் உலக அளவில் உள்ள இஸ்லா மியப் பெண்களின் மேம்பாட்டினை விரும்புபவர்கள் பத்திரிக்கைச் செய்திகளாக வும், கட்டுரைகளாகவும், இணைய தளம் மூலம் கடிதங்கள் அனுப்பியும் தங்களது பாராட்டையும் ஊக்கத்தையும் அளிக்கின்றனர்.

■ சில ஆண்கள் ஜமாத் பிரதிநிதிகள் பெண்கள் ஜமாத்தின் பணியின் தன்மையை அங்கீகரித்து, பெண்கள் ஜமாத் கூட்டத்திற்கு வந்திருந்து, பாதிக் கப்பட்ட பெண்ணின் தரப்பு நியாயங்களை விளக்கி, அந்தப் பெண்ணிற்கு நியா யம் பெற்றுத் தர உதவுகின்றனர்.

■ சில ஆண்கள் ஜமாத் பிரதிநிதிகள் தங்களது ஆதரவை நேரிடையாக வெளிப்படுத்த முடியாமல், பாதிக்கப்பட்ட பெண்களைப் பெண்கள் ஜமாத்தை அணுகிப் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளுமாறு வழி காட்டுகின்றனர்.

**பெண்கள் ஜமாத் எதிர்கொள்ளும் சவால்கள் :**



■இஸ்லாமிய மதத் தலைவர்கள் பெண்கள் ஜமாத் மற்றும் ஸ்டெப்ஸ் நிறு வனத்தின் முஸ்லீம் பெண்களுக்கான செயல்பாடுகளை மதத்திற்கு எதிரான செயல்பாடுகளாகக் கருதி இஸ்லாமியப் பத்திரிக்கைகளில் ( உதாரணம் - சமரசம் பத்திரிக்கை, நர்க்கீஸ், முஸ்லீம் பெண்மணி ) வெளியிடுகின்றனர்.

■பெரும்பாலான பெண்களுக்குள் பதிந்துள்ள கலாச்சார ரீதியான, மதரீதியான பெண் உருவகம் அவர்களின் சிந்தனையைக் கட்டிப்போடுகிறது. நியாயத்திற்காகப் பெண்கள் குரல்கொடுக்கும்போது 'இது மதத்திற்கு எதிரானது', 'இது பெண்ணுக்கு அழகா' என்ற ரீதியிலேயே அவர்கள் சிந்தித்து, முன்னேற்றகரமான சிந்தனைகளுக்க முட்டுக்கட்டையான உள்ளனர்.

■இஸ்லாம் அல்லாத பிற மதவாத அரசியல் கட்சிகளின் தூண்டுதலினால் பெண்களைத் திசை திருப்புவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பாகப் பிரச்சாரம் செய்கின்றனர்.

■ஒரு சில பகுதிகளில் முஸ்லீம் பெண்கள் ஜமாத் பிரதிநிதிகளான உள்ள பெண்களையும் ஜமாத்திற்கு ஆதரவாகச் செயல்படும் பெண்களையும் அந்தப் பகுதி மக்கள் இழிவாகப் பேசியும், பெண்கள் ஜமாத்திற்கு ஆதரவு அளித்தால் உள்ளூர் ஜமாத்திலிருந்து அந்தக் குடும்பத்தை விலக்கிவிடுவதாகவும் மிரட்டுகின்றனர்.

■மாநில அளவில் ஜமாத்துகளைக் கட்டுப்படுத்தும் அமைப்பான வக்ஃப் போர்டு ஸ்டெப்ஸ் நிறுவனம் மூலம் தபாலில் அனுப்பி வைக்கப்படும் கோரிக்கைகளை வாங்க மறுத்துத் திருப்பி அனுப்பி விடுகிறது.

**பெண்கள் ஜமாத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் :**

■பெண்கள் ஜமாத் ஒரு வருட காலத்திற்குள் பெண்கள் ஜமாத்தின் தோற்றம் மற்றும் செயல்பாடுகள் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் உள்ள முஸ்லீம் பெண்களைச் சென்றடைந்துள்ளது.

■தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் உள்ள ஆண்கள் ஜமாத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் அமைப்புகளின் செயல்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

■மாவட்ட அளவில் மத அமைப்புகள் இஸ்லாத்தைப் பற்றிய ஒரு 'பயான்' பிரசங்கத்தை முஸ்லீம் பெண்களுக்காக நடத்துகின்றன. இதில் இஸ்லாத்தில்

சொல்லப்படாத பெண்கள் ஜமாத்தை ஏற்கக் கூடாது என்பதை வலியுறுத்து கின்றனர். இதன் மூலம் மத அமைப்புகள் முஸ்லீம் பெண்கள் மீதுள்ள தங்கள் ( பொய்யான ) அக்கறையை, பொறுப்பை வெளிப்படுத்துகின்றன.

■ மாநில மற்றும் தேசிய அளவில் வரதட்சணை ஒழிப்பு, முத்தலாக் போன்றவற்றின் பாதிப்புகள் பற்றிப் பேசப்படுகிறது.

■ இஸ்லாமிய இளைஞர்கள் வரதட்சணை ஒழிப்புக் கமிட்டியின் மூலம் திருமணம் ஆகாத இளைஞர்களை ஊக்கப்படுத்துகின்றனர்.

■ லெப்பைக்குடிக்காடு, பெரம்பலூரில் உள்ள கிழக்கு ஜும்மா மற்றும் மேற்க ஜும்மா பள்ளிவாசலில் வரதட்சணை வாங்கித் திருமணம் நடத்துவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் பெண்கள் ஜமாத்தின் பிரதிநிதி உள்ளனர்.

**பெண்கள் ஜமாத்தின் எதிர்காலத் திட்டங்கள் :**

■ இஸ்லாமியப் பெண்கள் தங்களைப் பற்றிப் பேச, தங்கள் நிலையை விளக்கிச் சொல்ல, தங்களைப் பற்றிச் சிந்திக்க, இளைப்பாற தங்களை மேம் படுத்திக்கொள்ள, மத வழிபாட்டில் ஈடுபட முஸ்லீம் பெண்களுக்கான காப்பகம் - பெண்களுக்கான தனி பள்ளிவாசல் ஒன்றைக் கட்டுதல்.

■ முஸ்லீம் பெண் குழந்தைகளின் கல்வியை வலியுறுத்தி, கல்வி கற்பதற் கான வாய்ப்புகளையும் வசதிகளையும் இழந்த முஸ்லீம் பெண் குழந்தைகளுக்கு குழந்தைகள் காப்பகம் மூலம் தொடர்ந்து கல்வி அளித்தல்.

■ இஸ்லாமியப் பெண்களுக்குப் பெண் என்ற முறையில் அவர்களது பாது காப்பிற்காக உள்ள சட்டங்கள், இஸ்லாமிய முறைப்படி அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ள உரிமைகள், ஷரியத்தில் சொல்லப்பட்ட சட்டங்கள் போன்றவை களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைத் தன்னம்பிக்கை மிக்க வர்களாக உருவாக்குதல்.

■ தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பெண்கள் ஜமாத்தின் தலைமையில் மாவட்ட அளவிலான குழுக்களை உருவாக்கி அந்தப் பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட இஸ்லாமியப் பெண்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணு தல் மற்றும் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

■ ஸ்டெப்ஸ் நிறுவனம் மூலம் அளிக்கப்படும் பயிற்சியின் மூலம் பெண் கள் ஜமாத்தின் பிரதிநிதிகளை மேலும் பலமுள்ளவர்களாக உருவாக்க வேண்டும்.

■ முஸ்லீம் பெண்கள் நல்வாழ்விற்கு மத்திய மாநில அரசுடன் பேச்சு வார்த்தை செய்தல்.

சிறுகதை



# மீளல்

-ரோஜாகுமார்

கதவைச் சாத்தித் தாழிட்டபோதே அவன் முகம மாறியிருந்ததைப் பார்த்தாள். எப்போதும் சட்டையைக் கழற்றிவிட்டு முண்டாப் பனியனுடன் இருப்பவன், அதையும் கழற்றிவிட்டு, மொச மொசவென்றிருந்தான். பெருமழை பெய்த ஓய்ந்துவிட்டிருந்தபடியால் தெரு ஆழ்நிலையிலிருந்தது. எவரும் கதவு தட்டும் படியான சூழல் ஏதுமில்லை என்பதைச் சாதகமாக்கிக் கொண்டது போலிருந்தான். அவன் செய்கைகளின் பேரில் சம்மதமில்லாமல் சகிப்பை இழந்திருந்தவள், சேலையைக் களைந்துவிட்டு இரவு உடைக்கு மாறியிருக்க வேண்டியதில்லை என்று எண்ணினாள். அது ஒருவகைச் சௌகரியமென்றாலும் உடன்பட எண்ணமிருக்கிறது என்பதை உணர்த்திவிடுமோ என்கின்ற ஐயமிருந்தது. உறங்கிக் கிடந்த பிள்ளைகளையும், இரைந்து கிடந்த வார இதழ்களையும் ஒதுக்கிப் போடுவதில் முனைந்திருந்தவன், அடிக்கொருதரம் அவளையும் பார்த்துக் கொண்டான். நீயும் ஏன் உதவிடக்கூடாது என்றிருந்தது அப்பார்வையின் தொனி...

கனமான காக்கிப் பையிலிருந்தது அந்த வீடியோ காஸெட் ரெக்கார்டர். அதை வெளியே எடுத்தபோதும் அவளைப் பார்த்தான். பையின் உள்ளிருந்த சிறு பையில் இரண்டு காஸெட்டுகள் இருந்தன. ஒன்றை உருவி எடுத்துத் திரும்பித் திருப்பிப் பார்த்தான். டெலிவிஷனுக்கும், வீடியோ காஸட் ரெக்கார்டருக்கும் வயர்களைத் தொடர்பு படுத்தி, காஸட்டை வி.ஸி.ஆருக்குள் நுழைத்துப் பொத்தானை அமுத்தினான். ஆற்றோரம் நின்ற நாயகனும், நாயகியும்...

'காற்றினிலும் மழையினிலும்


கலங்க வைக்கும் இடியினிலும்..'

குரல்வளையை நெரிப்பத போல் பொத்தானை அழுத்தியவுடன்.... பாடல் பறிபோனது. பார்த்துக் கொண்டிருந்தவளின் ஆர்வம் யாவும் இருட்டுக்குள்ளிருந்தது. ஒளி கசிந்துவிடக் கூடாதென்பதில் கவனமாகச் சன்னல்களையும் சாத்தி - காஸெட்டை மாற்றினான்.

- திரையில் அலையடித்தது.

பல்லாயிரக்கணக்கில் கிருமிகள் நெளிந்தன...

இழப்பின் தவிப்பில் எழுந்து, வயரின் தொடர்பை ஒழுங்குபடுத்தியவனின்



நெற்றியிலும், மார்பிலும் வியர்த்துக் கசகசத்தது. வேட்டைக்காரனைப் போல் பார்த்தான். திரையில் அலைகளினூடே உருவங்களின் அசைவு.. பார்வையை நிலைக்கவைத்தபடியே அவளைக் கூப்பிட்டான். விழிகளில் கப்பிய வெறுப்புடன் அசூசையுடன் பின்னகர்ந்தாள். தூக்கக் கலக்கத்தில் எழுந்த மகன் தலையணை யில் தலையை ஊன்றி - இடுப்பைத் தூக்கி நின்றான். மகளுக்கு அருகில் அவ னைக் கிடத்திவிட்டு கொடியில் தொங்கிய வேட்டியை உருவிப் பிள்ளைகளின் முகங்களை மூடினான்.

"பிள்ளைங்கல சாகக்குடுக்கல...!" - வேட்டியை எடுத்து எறிந்துவிட்டுச் சீறினாள். மகனைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டவளின் மீது அவனுக்குக் கோபம்தானென்றாலும் வெளிக்காட்டத் துணிவில்லாமல் - இராப்பிச்சையாய்ப் பல்வரிசை காட்டி - அவளை அருகில் அழைத்தான்.

- மகனுடன் படுத்துவிட்டாள்.

ஒளி வந்த திரையிலிருந்து முனகல் ஒலி...

தொண்டைக்கும் நெஞ்சுக்குமான மரண அவஸ்தையின் நிலை போலிருந் தது. வேண்டாத நேரத்தில் வேற்று மனிதர்களின் பிரவேசம் போல் வெறுப்பின் கூச்சத்தில் குறுகினாள். கோழி திருடுவது போல் பதுங்கிப் போய் - படுத்துவிட்ட வளின் பாதங்களைப் பற்றினான். முகத்தின் பாதியை இருட்டு அரித்திருந்தது விகாரம்...

அவளின் விழிகளில் தீ!

"வா!"

நீட்டிய கையைத் தட்டி எறிந்து - கால்களை இழுத்துக் கொண்டவாறு பின்னகர்ந்தாள்.

"யே..."

திரையில் ஒளிகுன்றி - ஒலி கூடிப்படபடத்தது. திரும்பிக் கைநீட்டிக் காட்டி - அவளையும் பார்க்க வரச் சொல்லி வல்லூறின் பதட்டத்தில் பார்த்தான்

-ஒருக்களித்துக் கொண்டாள்.

"யே..."

"......"

"ய்... யேய் !"

அவள் அசையவில்லை-

"இங்ய பார்ளே" - முழந்தாளிட்டவாறு யாசகனைப் போல் கையேந்தினான். விசுக்கென்றெழுந்து தலையில் ஓங்கி அறைந்து கொண்டு அப்படியே தாழ்ந்துவிட்டாள். ஓரிரடிகள் ஊர்ந்து, காதோரம் குனிந்து, வாயிலும்- மூக்கிலுமாக வந்த வெப்பத்தை உமிழ்ந்தான். வியர்வையின் துர்கந்தம் குமட்டியது. ஒருக்களிப்பைப் குப்பறப்படுத்திக் கொண்டு காதுகளைப் பொத்திக் கொண்டாள்...

"யே..." -அவனின் கால்கள் நான்காயின. நாசி தூக்கி நீண்டு விடாது உலுப்பி இறங்கும் தொனியில் - "வி.ஸி.ஆருக்கும் அந்த காஸெட்டுக்கும் வாடகை நூத்தம்பது ரூவா... நீ வந்து பாருளெ..." -அவளின் கைவிரலைப் பற்றி இழுத்தான். மசியாமல் மேலும் சுருண்டாள். நழுவியது போல எழுந்து - காட்சிக்கு எதிரே சுவரில் சாய்ந்து கொண்டவனின் கண்கள் நிலைகுத்தி, இமைகள் ஒடுங்கின. விரைத்தபடியே அவளைக் கூப்பிட்டான். அப்படியே கிடந்தாள். இங்குமங்குமான எதிர்பார்ப்பில் எழுந்து போய்க் கூப்பிட்டவனின் வாய் விரிந்ததில் கீழ்வரிசைப் பற்கள் மறைந்திருந்தன. மறுபடியும் தலையில் அடித்துக் கொண்டாள். பொறுமை போய்விட்டது. கன்னத்தில் ஒரு அறையும் - இடுப்பில் ஒரு மிதியும் கொடுத்தான். அவள் நீள நாசியிலுள்ள ஒற்றைக் கல் மூக்குத்தியில் விரல் பட்டுச் சில்லுடைந்து இரத்தம் கசிந்து எழுந்து நின்று எத்தினான்.

- ஆள்காட்டி விரலில் ஒற்றிப் பார்த்தாள். குருதி நிழலாடியது...

■■■

அடி உதையில் ஆதாயமற்றுக் காரியத்தின் கேடுணர்ந்த ஏமாற்ற முழுமையில் சுவரில் ஓங்கி அறைந்தான். கால்களை நீட்டியபடி வெறித்திருந்



தவள் எழுந்து போனதைக் கண்டு கொள்ள வில்லை. ஒரு சில நிமிடங்களில் அடுப்படியில் குப்பென்று தீயின் ஜுவாலை கிளம்பி அனலடித்தது. பதறி எழுந்த தில் நீட்டியிருந்த வி.ஸி.ஆரில் முழங்கால் பட்டுத் தொடர்பு வயர்கள் விடுபட்டுத் தொங்கின. "ய்யேய்" -கத்தியபடி ஓடினான். மண்ணெண்ணெய் மணத்துடன் எரிந்த புகை மண்டலத்தினூடே நின்றாள். ஆளுயரத்துக்கு நெருப்பு எழும்பி எரிந்தது. ஆடைகளற்ற இருபாலரின் அந்தரங்க நிலைகள் செப்பும் ஒரு கட்டு அளவிலான புத்தகங்கள் தீய்க்குத் தீனியாகிக் கொண்டிருந்தன. அவள் அந்தப் பக்கம் நின்று கொண்டிருந்தாள். எரிந்தது அவள்தானா என்ற பாதிப்பில் வலுப் போய்விட - ஹாலுக்குப் போய் நின்றாள்.

அவளும் வந்தாள் -

அச்சம் குறையாமல் அவனும், அதிபயங்கரமாய் அவளும் பார்த்தனர். நாசியில் கசிந்த இரத்தத்தைத் துணியில் ஒற்றியபடியே - "திமிர்ல, கை நீட்டிட்ட" என்றவள் கேட்டாள் "இன்னொருத்தனுக்கு நீ என்னய அனுமதிப்பியா?"

"ய்யே..."

"கத்தாத !" என்றாள். பயந்து எழுந்த மகள் உட்கார்ந்தபடி வெறித்துவிட்டுக் குப்புறப்படுத்துக் கொண்டாள்.

"ம்... சொல்லு. நீ அனுமதிப்ப?" என்ற கேள்விக்கு வார்த்தைகளின்றி அலறினான்.

"ய்யெ"

"கத்தாத !" என்றவள் திரையைக்காட்டி - "நா கிளர்ந்து ஈடுகொடுக்கணும்னா அதில் வர்றவனோட அந்தரங்கம் பார்க்கணும். அதுக்கு அர்த்தம்? நீ அனுமதிக்கற... ஒருத்தியோட அந்தரங்கம் பார்க்கற உனக்கம் அதுதான். உள்ளுக்குள்ளேயே சோரம் போய்ச் சுகம் தேடறது குடும்பமில்ல. நீயும், நானும் அம்மணமாகக் கெடந்தாலும் அது ஒழுக்கம். நானும் பாக்கணுமின்னு எதிர்பார்க்கற பாரு. அது அசிங்கம்! "

அறுத்து வைத்த ஆட்டுத் தலையின் கண்கள் போலிருந்தது அவனின் விழிகள். பிள்ளைகளுக்கிடையில் கிடந்து உறங்கிப் போனவளுக்குத் தெரியாது - எப்போது வீழ்ந்தான் என்று.

# எங்க ஊர் ஜமாத்

திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூரைச் சேர்ந்த ஜீபைதா பேகம் (45 வயது) என்பவர் மிகவும் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். 25 வருடம் முன்பு மிகவும் பிரம்மாண்டமான முறையில் வரதட்சணையாக நகைகளும் துணிமணிகளும் கொடுக்கப்பட்டு இவரது திருமணம் நடத்தப்பட்டது. ஜீபைதா பேகத்தின் கணவர் காஜா மொகைதீன் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரைத் திருமணத்திற்குப் பிறகு ஜீபைதாவின் குடும்பத்தினர் செலவு செய்து பட்டப்படிப்புப் படிக்க வைத்து வெளிநாட்டிற்கு வேலைக்காக அனுப்பி வைத்தனர். ஜீபைதாவிற்கு ஒரு மகன் பிறந்ததும் காஜா மொகைதீன் வெளிநாட்டிற்கு வேலைக்குச் சென்றார். அதனால் மாமியார் வீட்டில் ஜீபைதா அனைத்துவிதமான கொடுமைகளுக்கும் ஆளானார். 9 வருடம் கழித்து ஜீபைதா மறுபடியும் கர்ப்பமானார். மாமியார் வீட்டில் சரியான உணவு அளிக்கப்படாமல் கொடுமைப்படுத்தப்பட்டு, தாயார் வீட்டிற்கும் செல்ல அனுமதியின்றி, உடல் நலிவுற்று, ஜீபைதா தனது இரண்டாவது குழந்தையை இழந்தார். அவரது உடல்நிலை மிகவும் மோசமானது. இதனால் காஜா மொகைதீன் ஜீபைதாவையும் மகனையும் வெளிநாட்டிற்கு அழைத்துச் சென்றார். ஜீபைதாவின் நகைகளை வைத்து அவரது நாத்தனாருக்குத் திருமணம் முடிக்கப்பட்டது. எதற்குமே வழியின்றி நின்ற குடும்பம் ஜீபைதா மூலம் அனைத்து வசதிகளையும் பெருக்கிக் கொண்டது. காஜா மொகைதீன் வெளிநாட்டிற்கு மனைவி வந்ததிலிருந்து ஜீபைதாவைப் பாலியல் ரீதியாக மிகவும் சித்ரவதை செய்தவண்ணம் இருந்தார். அவர் இணையதளத்தில் பார்க்கும் அனைத்துவிதமான நிலையிலும் தனது மனைவியைப் பாலியல் உறவுகொள்ள விரும்பினார். ஜீபைதாவின் முதுமை உணர்ந்து காஜா மொகைதீன் ஜீபைதாவைத் துன்புறுத்த ஆரம்பித்தார். இந்நிலையில் ஜீபைதாவின் மகன் வெளிநாட்டில் வேற்று மதத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை இஸ்லாத்திற்கு மதம் மாற்றித் திருமணம் செய்து கொண்டார். இந்தத் திருமணத்தினால் கோபமடைந்த காஜா மொகைதீன் மகனின் செயலுக்குத் தாய் தான் உடந்தை என்று குற்றம் சாட்டி அவரை வெளிநாட்டிலிருந்து தாய்வீட்டிற்கு அனுப்பி வைத்தார். மகன் வேலை செய்த அலுவலகத்திற்குச் சென்று அவன் வேற்றுமதப் பெண்ணைத் திருமணம் முடித்ததைக் கூறி இஸ்லாத்திற்கு எதிராகச் செயல்படுவதாகச் சொல்லி வேலை நீக்கம் செய்தார். இன்று தாயும் மகனும் நிராதரவாகத் தமிழ்நாட்டில் நின்று கொண்டிருக்கின்றனர். மருமகள் மட்டும் வெளிநாட்டில் வேலை செய்து கொண்டு இருக்கிறார். இந்தியா திரும்பிய ஜீபைதா உடல் நலிவுற்று தனது கருப்பையை இழக்க நேரிட்டது. இந்நிலையில் காஜா மொகைதீன் தபால் மூலம் தலாக் சொல்லிவிட்டார். காரணம்

என்னவென்றால் இவரது ஒரே மகன் திருமணம் காரணமாக இவர் தனது மனைவி மற்றும் மகனை விலக்கி விட்டதாகவும், தற்போது அவருக்கு வாரிசு வேண்டும் என்பதால் 50 வய திற்கு மேலாகும் காஜா மொகைதீன் தற்போது அவரைக் கவனித்துக் கொள் வதற்காக வேறு திருமணம் செய்யப் போவதாக அறிவித்துள்ளார். ஒரு மாதத்திற்குப் பல லட்சங்கள் சம்பா திக்கும் காஜா மொகைதீனை அவரது குடும்பத்தினர் பணத்திற்காகத் திசை திருப்பி அவரை வளரவைத்த மனைவி மற்றும் குடும்பத்தை நடுரோட்டில் நிராதரவாக நிற்க விட்டு விட்டார். அந்த உள்ளூர் ஜமாத்தும் பணபலம் மிக்க காஜா மொகைதீனுக்குச் சாதகமாகத் தலாக்கை ஊர்ஜிதப் படுத்திவிட்டது. ஜீபைதா இணையதளம் மூலம் ஸ்டெப்ஸ் நிறுவனத்தின் செயல்பாடுகளை அறிந்து அவர்களது உதவியை நாடினார். திரு வாரூர் மகளிர் காவல் நிலையம் மூலம் இருதரப்புக் குடும்பத்தினர் முன்னிலை யில் வெளிநாட்டிலிருந்து காஜா மொகைதீனை வரவழைத்துப் பேச்சு வார்த்தை பலமுறை நடத்தப்பட்டது. இந்தப் பேச்சு வார்த்தையில் ஜீபைதாவின் கணவர் இவருக்குத் தலாக் சொல்லிவிட்டதற்கான ஆதாரங்கள் நிரூபிக்கப்பட்டன. காவல் நிலையமும் இஸ்லாமியச் சட்டங்களை மீறி நாங்கள் எதுவும் செய்ய முடியாது என்று கூறிவிட்டனர். ஜீபைதாவின்று வாழ்வாதார நிதியாக ஒன் றிரண்டு லட்சங்களை மட்டுமே பெற்றுக் கொள்ளுமாறு ஜமாத்தினரும் காஜா மொகைதீன் உறவினரும் வற்புறுத்துகின்றனர். தற்போது ஜீபைதாவின் அன் றாட மருத்துவச் செலவிற்கே அவர் வழியின்றித் தவிக்கிறார். அவரது நகைகள் அனைத்தும் மாமியார் வீட்டில் உள்ளன. அதனையும் கொடுக்க மறுக்கின்றனர். அவரது மகனும் வெளிநாட்டில் வேலை தேடும் முயற்சியில் இருக்கிறார். தற் போது இவரது கேஸ் வழக்காகப் பதிவாகி, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் பட்டுள்ளது.



*(சம்பந்தப்பட்டவர்களின் பெயரும் ஊரும் மாற்றப்பட்டுள்ளது.)*

ooo

*அச்சிட்டு வெளியிடுபவர்கள்: **ஸ்டெப்ஸ் பெண்கள் மையம்**, யூனியன் அலுவலகம் அருகில், புதுக்கோட்டை - 622 001. தொலைபேசி: 04322-220583. வடிவம், ஓவியங்கள் உதவி: ஸ்ரீரசா. வடிவமைப்பு: காலம் வெளியீடு. 25,மருதுபாண்டியர் 4-வது தெரு, மதுரை - 2.*

# பெண்ணின் மூக்கை வெட்டி எறிந்த கணவர்...

சமீபத்தில் திருமணம் செய்து கொண்ட ஒரு பெண்ணின் கணவர், திருமணத்துக்கு முன்பு இன்னொருவருடன் தவறான உறவு வைத்து இருந்ததாகக் கூறி, அவரது மூக்கை வெட்டி எறிந்தார்.

குடும்ப கவுரவுத்துக்காக

பாகிஸ்தானில் குடும்ப கவுரவத்தைக் காப்பாற்றுவதாகக் கூறிப் பெண்களைச் சித்திரவதை செய்யும் பழக்கம் அதிகரித்து வருகிறது. திருமண உறவுக்கு வெளியே கள்ளத் தொடர்பு வைத்துக் கொள்ளும் பெண்களால் குடும்ப கவுரவம் சீரழிந்து போனதாகக் கருதி, அந்தப் பெண்களை அடித்துக்கொல்வது, சித்ரவதை செய்வது என்பது பாகிஸ்தானின் கிராமப் பகுதிகளில் இன்றும் நிலவிவரும் வழக்கமாக உள்ளது. இப்படியான சித்ரவதை சமீபத்தில் கூட ஒரு பெண்ணுக்கு இழைக்கப்பட்டுள்ளது.

**18 வயது ஆயிஷா**

சித்ரவதை செய்யப்பட்ட பெண்ணின் பெயர் ஆயிஷா பலோச்டெரா. பாகிஸ்தானிலுள்ள காஜிகான் மாவட்டத்ததைச் சேர்ந்தவர். 18 வயதான இவருக்கு 2 மாதங்களுக்கு முன்புதான் திருமணம் நடந்தது. கணவர் பெயர் ஈசா.திருமணத்துக்கு முன்பு, ஆயிஷா இன்னொருவருடன் தவறான உறவு வைத்து இருந்ததாக ஈசா கேள்விப்பட்டார்.

**மூக்கை அறுத்தனர்**

இதனால் தன் குடும்பத்தின் கவுரவம் பாதிக்கப்பட்டதாகக் கருதினார். இதனால் அவரும் அவரது அண்ணனும் சேர்ந்து அடித்து உதைத்தனர். பிறகு அவரை வெளியே இழுத்துச் சென்றனர்.அண்ணன் அக்பர் ஆயிஷாவைத் தரையில் பிடித்துத் தள்ளினார். ஈசா ஆயிஷா மீது உட்கார்ந்து கொண்டு,அவள் மூக்கையும் உதடுகளையும் வெட்டி எறிந்தார்.ரத்தம் சொட்டச் சொட்ட ஆயிஷா கதறி அழுதார். இதைப் பார்த்த அக்கம் பக்கத்தினர் ஆயிஷாவை நோக்கி ஓடி வந்தனர். உடனே ஈசாவும் அக்பரும் மோட்டார் சைக்கிளில் ஏறி அங்கு இருந்து தப்பி ஓடி விட்டனர். அதன் பிறகு ஆயிஷா முல்தான் நகரில் உள்ள ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.



**ஆண்டுக்கு ஆயிரம் பேர்**

குடும்ப கவுரவத்தைக் காப்பதற்காக என்று கூறி பாகிஸ்தானில் ஒவ்வொரு மாதமும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் கொல்லப்படுகின்றார்கள். இதை விட அதிகமான அளவில், பெண்கள் அடித்து உதைத்துச் சித்ரவதை செய்யப்படுகிறார்கள்.

**10 ஆண்டு ஜெயில்**

இப்படிப்பட்ட குடும்ப கவுரவக் கொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக ஓர் அமைப்பு இஸ்லாமாபாத்தில் தொடங்கப்பட்டு உள்ளது.

குடும்ப கவுரவத்தைக் காப்பாற்றுவதாகக் கூறிக் கொலைகளில் ஈடுபடுபவர்களுக்கு 10 ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கப்படும் என்ற சட்டம் கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது. ஆனால் இதை நடைமுறைப்படுத்த வேண்டிய போலீசார் சட்டத்தை அமல் படுத்த ஒத்துழைப்பது இல்லை. மேலும் குற்றவாளிகளின் குடும்பத்தினர் குற்றத்தை மூடி மறைத்து விடுகிறார்கள்.

**கைது**

நல்ல வேளையாக ஆயிஷாவைக் கொடுமைப்படுத்தியவர்களைப் போலீசார் கைது செய்து விட்டனர். அதோடு ஆயிஷாவின் மாமனாரும் கைதானார். ஆனால் தனக்கு நீதி கிடைக்கும் என்று ஆயிஷா நம்பவில்லை. அவர்கள் பண வசதிமிக்கவர்கள். அவர்கள் தண்டனையிலிருந்து தப்பி விடுவார்கள் என்கிறார் ஆயிஷா.

OOO

*நன்றி: தினத்தந்தி, 29-5-06*

# இஸ்லாத்தின் சொத்துரிமை

இறந்துபோன ஒருவருக்கு ஆண்-பெண் மக்கள் இருந்தால் இரு பெண்களுக்குக் கிடைக்கும் பங்கிற்குச் சமமான பங்கு ஓர் ஆணுக்குக் கிடைக்கும். (எ.கா.) ஒரு மகனும் ஒரு மகளும் மட்டும் இருந்தால் மொத்த சொத்தை மூன்று பாகங்களாகப் பிரித்து இரு பாகங்களை மகனும், ஒரு பாகத்தை மகளும் எடுத்துக் கொள்வர். ஆண் குழந்தை இல்லாமல் ஒரு பெண் மகள் இருக்கும் போது அவளுக்கு மொத்தச் சொத்தில் பாதி (1/2) கிடைக்கும். இரண்டு (அ) இரண்டுக்கும் அதிகமான புதல்வியர் இருப்பின், அவர்களுக்கு மொத்தச் சொத்தில் மூன்றில் இரு பாகம் (2/3) கிடைக்கும். இறந்து போனவருக்குக் குழந்தை இருப்பதுடன் பொற்றோரும் இருந்தால், பெற்றோரில் ஒவ்வொருவருக்கும் தலா ஆறில் ஒரு பாகம் (1/6) கிடைக்கும். குழந்தை இல்லாமல் பெற்றோர் மட்டும் இருந்தால் தாய்க்கு மூன்றில் ஒரு பாகம் (1/3) கிடைக்கும். மீதி தந்தைக்குரியதாகும். இந்நிலையில் சகோதரர்களும் இருந்தால் தாய்க்கு ஆறில் ஒரு பாகம் (1/6) கிடைக்கும். மீதி தந்தைக்கு. இவையெல்லாம் இறந்து போனவர் செய்த மரண சாசனத்தையும், அவருக்குள்ள கடனையும் நிறைவேற்றிய பின் மீதமுள்ள சொத்தில் கிடைக்கும் பங்குகளே ஆகும்.

தாய், தந்தையர் ஒவ்வொருவருக்கும் எப்போது எவ்வளவு பாகம் கிடைக்கும் என முன்பே விவரிக்கப்பட்டுள்ளது. கணவன் மற்றும் மனைவி யின் பங்கை இங்கே பார்ப்போம்: இறந்தவர் பெண்ணாக இருந்தால் அவர் விட்டுச் சென்ற சொத்தில் பாதி (1/2) கணவனுக்குக் உரியதாகும். இது, இறந்து போன பெண்ணுக்குக் குழந்தை இல்லாத நிலையிலாகும். குழந்தை இருப்பின் கணவனுக்கு நான்கில் ஒரு பாகம் (1/4) கிடைக்கும். இதைப் போன்றே இறந்தவர் ஆணாக இருப்பின், அவருக்குக் குழந்தை இருக்கும்போது மனைவிக்கு எட்டில் ஒரு பாகமும் (1/8), குழந்தை இல்லாத போது மனைவிக்கு நான்கில் ஒரு பாகமும் (1/4) கிடைக்கும்.

---

(பாகம் - 1, ஹதீஸ் எண்- 194
**நபிகளாரின் பொன்மொழிகள்** ஸஹீஹீல் புகாரி 5-ம் பாகம்,
ரஹ்மத் அறக்கட்டளை)

தனிச்சுற்றுக்கு மட்டும் நன்கொடை Rs. 50/–

**கல்வி வேலைவாய்ப்புத்
துறைகளில்
முஸ்லீம் பெண்களுக்கு
இட ஒதுக்கீடு வழங்கக்
கோரி...
முஸ்லீம் பெண்களுக்கு
எதிரான வன்முறைகளைக்
கண்டித்து...
இஸ்லாமுக்கு எதிராக
வரதட்சணை வாங்குவோர்
மீது நடவடிக்கை எடுக்கக்
கோரி...**

தமிழ்நாடு முஸ்லிம் பெண்கள் ஜமாத்
மற்றும்
ஸ்டெப்ஸ் பெண்கள் மையத்தின் சார்பில்...

**தஞ்சையில்
மாநில அளவிலான**

# ஒருநாள் அடையாள உண்ணாவிரதம்

மாவட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
அருகில், தஞ்சாவூர்

நாள்:3.7.2006, காலை 10மணி முதல் மாலை 5 மணிவரை